Registered No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION

EDITORS:

M. S. PURNALINGAM PILLAI, B.A.
V. G. SURYANARAYANA SASTRI, B.A.

Vol. V. No. 3.—October 1901.

CONTENTS.

| | | |
|---|---|---|
| Madura Tamil Sangam | Editors | 81 |
| Ramayanam : Rejoinders | I. Pandit S. M. Natesa Sastriar, B.A. | 84 |
| | II. T. E. Venkatachariar | 90 |
| The Barometer | C. Subrahmanya Chari, B.A., L. T. | 95 |
| Silappadikaram : A Study | P. A. Pranatartihara Sivan, B.A. | 97 |
| Radharani : A Novel | T. A. Swaminatha Aiyar. | 102 |
| Moral Verses | C.R. Namasivaya Mudaliar | 108 |
| Tit Bits | C. D. Venkatavarada-chariar | 111 |
| CORRESPONDENCE | | 112 |
| REVIEWS OF BOOKS | | 117 |
| EDITORIAL NOTES | | 119 |

Madras:
THOMPSON AND CO.,
33, POPHAM'S BROADWAY.

1901.

# JNANA BODHINI

**Terms of Subscription.**

**Annual Subscription including postage... 2 8 0**

**N.B.**—The year begins with August, and subscriptions are not accepted for broken periods. New subscribers joining in the course of the year, will as far as possible be supplied with the back numbers of the current volume.

## TO ADVERTISERS.

**The Jnana Bodhini** affords the best and cheapest medium for advertising. It reaches all classes of people and commands the largest monthly circulation. Rate per page per insertion Rs. 5. Apply to Messrs. Thompson & Co., Publishers, Broadway, Madras.

*All literary contributions and books for Review and business letters, &c., should be addressed to T. A. Swaminatha Aiyar, Manager, The "Jnana Bodhini" Office, Black Town, Madras. All remittances should be made payable to Messrs. Thompson & Co., Publishers of "Jnana Bodhini," Broadway, Madras.*

## அறிக்கை.

**காரியஸ்தர்கள் தேவை.**

"ஞானபோதினி'ப் பத்திரிகையைப் பலவிடங்களில் பரவச்செய்து சந்தாதார்கள் சேகரித்து அனுப்பக்கூடிய காரியஸ்தர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். விவரந் தெரியவேண்டுவோர் "ஞானபோதினி" மானேஜருக்கு எழுதிக்கொள்க.

கோயமுத்தூர் இலாகாவுக்கு மகா-ா-ா-ஸ்ரீ சோமசுந்தர முதலியாரவர்களைக் காரியஸ்தராக ஏற்படுத்தியிருக்கிறோம்.

(மானேஜர்.)

## புதிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ரூபாவதி ... | 1 | 0 | 0 |
| 2. கலாவதி ... | 1 | 8 | 0 |
| ஷை சலிகோ ... | 1 | 12 | 0 |
| 3. சரசாங்கி ... | 1 | 0 | 0 |
| 4. சுகுணசுகேசர் ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 5. தசரதன் தவறு ... | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| 6 உஷா பரிணயம் ... | 0 | 8 | 0 |
| 7. நாடகவியல் ... | 0 | 8 | 0 |
| 8. தனிப்பாசுரத்தொகை | 0 | 4 | 0 |
| ஷை சலிகோ ... | 0 | 8 | 0 |
| ஷை ஆங்கில மொழி பெயர்ப்புடன் ... | 1 | 0 | 0 |
| 9. பாவலர் விருந்து (முதல் நாள்) ... | 0 | 8 | 0 |
| ஷை சலிகோ ... | 1 | 0 | 0 |
| 10. தாமரை நாண்மலர் .. | 0 | 6 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 12 | 0 |
| 11. வித்தியாரண்ய நகரம். | 0 | 8 | 0 |
| 12. நன்றியறியா மகன் .. | 0 | 8 | 0 |
| 13. பாரத ஸாரம் (முதற் பாகம் ... | 0 | 10 | 0 |
| ஷை சலிகோ ... | 1 | 0 | 0 |
| 14 வர்ண வைத்திய சாஸ்திரம் ... | 0 | 8 | 0 |
| 15. மச்சபுராணம் (செய்யுள்) கலிகோ ... | 2 | 8 | 0 |
| 16 திருமுல்லைவாயிர்புராணம் (சலிகோ) ... | 0 | 10 | 0 |
| ஷை (மார்பில்) ... | 0 | 8 | 0 |
| 17 செய்யுட்கோவை (கலிகோ) ... | 0 | 13 | 0 |
| ஷை மார்பில் ... | 0 | 10 | 0 |
| 18. விவேக விளக்கம் ... | 0 | 4 | 0 |
| 19. வாசகத்திரட்டு ... | 0 | 10 | 0 |
| 20. நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ... | 0 | 8 | 0 |
| ஷை (இரண்டாம்பாகம்) | 0 | 8 | 0 |
| 21. ஸ்ரீராமாநுஜ சரிதம். | 0 | 8 | 0 |
| 22. ஔவைகுறள் மூலம். | 0 | 2 | 0 |

இந்நூல்களெல்லாம் சென்னை **ஆரியன் புக் டெபோவிலும், தாம்ஸன் கம்பெனியாரிடத்திலும்,** அகப்படும்.

# ஞானபோதினி

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1901ஆ அக்டோபர்மீ 20உ } புத்தகம் 3.

விஷயங்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்.—பத்திராதிபர் ... 81
இராமாயண வாராய்ச்சி.—I. பண்டிதர் ச. ம. நடேச சாஸ்திரியார், பி. ஏ. 84
II. திரு. ஈ. வேங்கடாசாரியர் ... 90
வாயுமானி.—சி. சுப்பிரமணியாசாரி, பி. ஏ., எல். டி. ... 95
சிலப்பதிகார வாராய்ச்சி.—பி. ஏ. பிரணதார்த்திஹரசிவன், பி. ஏ. 97
இராதாராணி.—தி. அ. ஸ்வாமிநாத ஐயர் ... 102
நீதிசரித்திரம்.—கா. நமச்சிவாய முதலியார் ... 108
விநோதக்கூற்றுக்கள்.—க. தே. வேங்கட வரதாசாரியர் ... 111
கடிதம்.— ... 112
புத்தகக் குறிப்புக்கள்.— ... 117
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 119

பத்திராதிபர்:— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1901.

வருஷ சந்தா ரூ. 2—8—0] [சஞ்சிகை ரூ 0—4—0.

# ஞானபோதினி

சம்புடம் V. | 1901௵ அக்டோபர்௴ 20௳ | புத்தகம் 3.

## MADURA TAMIL SANGAM.

## மதுரைத் தமிழ்ச்சங்கம்.

“ஆவியந் தென்றல் வெற்பி னகத்தியன் விரும்புந் தென்பா
னாவலந் தீவம் போற்றி நாவலந் தீவந் தன்னுண்
மூவர்கட் கறியா னிற்ப முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்
பாவலர் வீற்றி ருக்கும் பாண்டிநன் னாடு போற்றி”

என ஆன்றோராற் சிறப்பித்துக் கூறப்படுஞ் செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராகிய ‘ஆயிரங் கண்ணோ னருங்கலச் செப்பு, வாய்திறந் தன்ன மதிலக வரைப்’பினையுடைய மதுரைமாநகரத் தின்கண்ணே சென்ற மதி பதினைந்தாந்தெய்தி ஞாயிற்றுக்கிழமையன்று புதுவதோர் தமிழ்ச்சங்கங் கூடியது யாவரு முணர்ந்ததே. அற்றை ஞான்று அரங்கேறிப் பிரசங்கித்த புலவர்களது பிரசங்கங்களின் சுருக்கங்களையும் பிறவற்றையுங் குறித்துச் சென்ற மதி 24-ஆம் தெய்தி செவ்வாய்க்கிழமை வெளிப்பட்ட **சுதேசமித்திரன்** பத்திரிகையில் “மதுரை நகரான்” எனக் கையெழுத்திட்டு ஒருவரெழுதி யிருக்கின்றனர். அவற்றை ஆண்டுக்கண்டு கொள்க. இனிச்சங்கத்திற்கு இன்றியமையாத சிலவற்றைக் குறித்துப் பேசுவாம்.

நமது மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கெனப் பொருள் பெரிதுஞ் சேர்ந்திருத்தலானும் நாளடைவில் அப்பொருள் விருத்தி

யடையு மாதலானும் முதற்கட் சங்கத்தினைத் துரைத்தனத்தார் அறியப் பதிவு செய்து யாவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க தாக்க வேண்டும்.

சங்கங்கள் யாவற்றினுக்கும் இன்றியமையாத அவயவிகளுட் காரியதரிசியாரே முக்கியமானவர். நமது தமிழ்ச்சங்கம் பெரிதாதலானும், இதற்குப் பொருள் விசேடித்திருத்தலானும், சங்கம் விருத்தியடையவே கடிதப்போக்குவரவு அதிகரிக்கு மாதலானும், சங்கத்திற்கு வேண்டுவனவற்றை யெல்லாம் மேற்கொண்டு நடாத்துபவ ரொருவர் தனியே சங்கத்திற்கே வேண்டுமாதலானும் கௌரவ காரியாதரிசியாயிருந்தாற் சங்க விஷயங்களில் ஏற்றக்குறை வேதேனும் நிகழ்ந்தவழிச் சங்கத்தார் சில சமயங்களிற் கண்ணோடி வாய்வாளாமை மேற்கொள்ளவேண்டி வருமாதலானும், கௌரவ காரியதரிசியாரைக் கண்டித்துக் கேட்பதற்கியலாது போதலு நேருமாதலானும், கௌரவ காரியதரிசியார் ஊக்கத்துடன் வேலை செய்வா ரென்பதும் அத்துணை நிச்சயமில்லையாதலானும், மாதச் சம்பளத்துக்கு ஒருவரைக் காரியதரிசியாராக நியமித்து விடுதலே நலமென்பது எமது கொள்கை. அங்ஙனம் நியமிக்குமிடத்து அன்னார்க்குத் தக்க சம்பளங்கொடுத்து அவரை ஊக்குதலும் வேண்டும்.

சென்னைச் சர்வகலாசாலைப் பரீக்ஷைகட்குப் படிக்கும் மாணவர்களை வருடந்தோறும் அவ்வவ்வகுப்பிற்குத் தக்கபடி சர்வகலாசாலைத் திராவிட பாடசபையாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள நூல்களிற் பரீக்ஷைசெய்து அதன்கண் தேறியவருள் முதலைவர்க்கு மட்டிற் பரிசளிப்பதாய் நமது சங்கத்தார் நிச்சயித்திருக்கின்றனர். அங்ஙனம் பரிசு மட்டில் அளித்து நின்றக்கால், பரீக்ஷைக்குச் சென்று பரிசு வாங்கத் தகுந்த வன்மையுடையோர் மட்டுமே சங்கத்தார் செய்யும் பரீக்ஷைக்குச் செல்வாரேயன்றி ஏனையோர் அதனை விரும்பிச்செல்லார். அன்றியும், சர்வ கலாசாலையாரால் நடத்தப்படும் பரீக்ஷைகளோடு சங்கத்தார்தாமும் இங்ஙனம் ஒரு பரீக்ஷை நடாத்துவதும் தமிழ் கற்பார்க்கு அத்தமிழின் கண் மிக்க ஆர்வம் விளைத்தற்பயன் சாலுதியேயன்றோ ? ஆதலான்

நமது சங்கத்தார் அங்ஙனம் பரீக்ஷை செய்யுங்கால் அதன்கட் பரிசு பெறுமற்போன போதிலும் தேறித் தக்ககலவியளவு காட்டுவார் யாவர்க்கும் யோக்கியதா பத்திரமளித்தல் வேண்டும். அன்னருள் முதலேவர்க்கு மாத்திரம் யோக்கியதா பத்திரத்தோடு பரிசு மளிக்கலாம். இவ்வாறு செய்தாற்றான் அவ்யோக்கியதா பத்திரப்பேற்றின் பொருட்டேனும் பலரும் விரும்பிப் பரீக்ஷைக்குச் செல்வர். மற்றும், தமிழ்ப்பரீக்ஷைக்குச் செல்வார் யாவரும் கௌரவத்தின் பொருட்டாதல் ஜீவனத்தின் பொருட்டாதல் அன்றி யிவ்விரண்டன் பொருட்டுமாதல் செல்வாராதலின் தேறிய பலருள் முதலேவர்க்கு மட்டிற் பரிசளித்து மற்றையோரைக் கவனியாது நின்றுவிடுதல் நேரிதன்று. இவ்வாறன்றி யாம் கூறுமாறு தேறினாரனைவர்க்கும் யோக்கியதா பத்திரங் கொடுத்துவந்தால் அங்ஙனந் தேறியவருளெவரேனுஞ் சீவனார்த்தமாய்ச் செல்வுழித் தங்கல்வியளவைப் பிறரறியுமாறு தாம் பெற்ற பத்திரத்தைக் காட்டிப் பயனடைவாரன்றே.

இப்பொழுது நமது தமிழ்ச்சங்கத்தின் ஒருறுப்பாக மகாராஜா பாற்கர சேதுபதி யவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் செந்தமிழ்க்கலாசாலையிற் படிப்போர்க்குத் தமிழ்ப்பாஷாஞானம் விருத்தியாவதற்குத் தக்கவாறு வருஷந்தோறும் இன்னின்ன நூல்கள் கற்பிக்கப்படுவனவென்றும் இன்ன நூல்கள் கற்றபின்னர் இன்ன நூல்கள்கற்பிக்கப்படுமென்றும் ஓரியைபு உண்டாக்கித்தமிழ்ப் பத்திரிகைகளின் மூலமாய் யாவருமறிய வெளிப்படுத்துதல் வேண்டும். வருடந்தோறுங் கற்பிக்கப்படும் நூல்களிற்பரீக்ஷை செய்து அதிற்றேறியமாணவர்க்கே வேறு நூல் கற்பித்தல் வேண்டும். அங்ஙனம் விதித்தபடி சில வருஷங்களிற் கற்றுத்தேறின் அவரவர் யோக்கியதைக் கேற்பப் ‘பண்டிதர்’, ‘புலவர்’, முதலிய பட்டங்களை யளித்தல் வேண்டும். இப்பரீக்ஷை சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிற் படிப்போர் மட்டில் நில்லாது மற்றைய ஊர்களில் உத்தியோகங்களிலிருப்பவரும் பிறவாசிரியர்களிடங் கற்றுத் தமிழ்க்கல்வியில் ஆர்வமுடையரா யிருப்பாராதலின் இன்னின்ன நூல்கள் கற்ற பின்னர் அவற்றின்கட் பரீக்ஷை நிகழுமென்று பத்திரிகைகள் மூலமாய்ச் சங்கத்தார் தெரிவிப்பாராயின் அவரும் அந்நூல்களைக் கற்றுப்

பரீக்ஷைக்குச்செல்ல விரும்பலாம். சர்வகலாசாலை மாணுக்கர்களுக்குப் பரீக்ஷை நடக்குமாறு போலவே இவர்களுக்கும் பரீக்ஷைகள் நடத்தி வரல் வேண்டும். அங்ஙனம் செய்தாற்றான் இக்காலத்துத் தமிழ் எழுத்துக்கள் மட்டுங் கற்று எளிய நடையிலுள்ள வசன நூல்களையும் பிழையறப்படிக்க வியலாது செய்யுட் பெயரையுங் கேட்டிலராய் இருந்தபோதினும் 'புலவ'ரெனவும் 'பண்டித' ரெனவும் 'வித்துவா' னெனவும் 'அட்டாவதானி' யெனவும் போலியாகப்பட்டப் பெயர் புனைந்துகொண்டு தாமுங்கற்றார் போலச் செருக்கித்திரியும சில கையறியாமாக்க ளிடத்திருந்து தவிக்குந் தமிழ்மகள் உயர்நிலை யெய்தி வனப்புற்று வளர்வாள். இனி, நமது சங்கத்தினின்றும் வெளிப்பட விருக்கும் 'செந்தமிழ்' என்னு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையைப்பற்றிய சில விஷயங்களையுஞ் சங்கத்தாரது அபிப்பிராயத்திற் கனுப்பப்படும் நூல்களை ஆராய்ச்சி செய்ப வேண்டிய முறையைப்பற்றிய விஷயங்களையும் பிறிதொரு சஞ்சிகையில் விரித்துக்கூறுவாம்.

இன்னும், 'பத்திராதிபர் குறிப்புக்கள்' என்ற தலைப்பின் கீழ்ச் சில விஷயங்கள் நம் தமிழ்ச்சங்கத்திற்கு ஆவனவென்று கருதி வரைந்திருக்கின்றோம். அவற்றை ஆண்டுக்காண்க.

பத்திராதிபர்.

---

## RAMAYANAM: REJOINDERS.
## இராமாயண வாராய்ச்சி.

I

நிகழ்ந்த செப்டம்பர் மாதத்து ஞானபோதினிப் பத்திரிகையில் ம-ா-ா-ஶ்ரீ, தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் "பண்டிதர் மகாபாரதத்திற்கு இராமாயணம் முந்திய தென்றும் முன்னையதிற்கூறும் விஷயங்களினும் பின்னதிற்கூறும் விஷயங்கள் பழமையானவை யென்றும் கொண்டிருக்கிறார். பாண்டவர்களுடைய காலம் இராமனுடைய காலத்திற்குப் பிந்திய தென்பது அவர் கொள்கை போலும். எமது கொள்கை அது வன்று. பாண்டவர்களுடைய காலம் முன் என்றும் இராமனுடைய

காலம் பின் என்றும் நாம் கொள்கின்றோம்'' என்று எனது கொள்கையை ஆக்ஷேபித்துத் தமது கொள்கையை வெளியிட்டிருக்கின்றார். இது புதுமையிற் புதுமை. எனது கொள்கைக்கு நான் ஏழு காரணங்களை எடுத்துக்காட்டியிருக்க அவைகள் உண்மையில் அங்ஙனமல்ல என்பதை எடுத்துக்காட்ட முயன்று, எனது கொள்கை ஒவ்வொன்றையும் எடுத்து ஆக்ஷேபித்துத் தள்ளித் தமது கொள்கையை நிரூபியாமல் 'எமது அபிப்பிராயம் இது' என்று மொத்தமாய்ச் சொல்லி முடிக்கின்றார். பாண்டவர்கள் காலத்துக்குப்பின் இராமர் காலம் என்று அவர்கள் வாதாடுகின்றபடியால் அவர்கள் முன்பாக நான் நின்று மறுமொழி சொல்லுவதைவிட வாயை மூடிக்கொண்டிருப்பதே மேன்மை. அப்படி நான் இருந்தால் தமது கொள்கையே நிலைநின்றது என்று அவர் நினைத்துவிடுவாராகையால் நானிப்பொழுது மறுமொழி சொல்லக் கடமைப்பட்டவனாகின்றேன். பாண்டவர்களுக்கு ஸகாய பூதராயிருந்த ஸ்ரீ கிருஷ்ணன் இராமனுக்கு எவ்வளவோ பின்னிட்டு அவதரித்தவர் என்பது மேலைத்தேசத்துப் புலவர்கள் கீழைத்தேசத்துப் புலவர்கள் ஆக எல்லோருக்கும் ஒப்பு முடிந்த கொள்கை. பாண்டவர்கள் காலம் இராமனுடையகாலத்துக்கு முன்பாக இருக்கவேண்டும் என்று பிள்ளையவர்கள் சொல்லுவது கிருஷ்ணாவதாரம் இராமாவதாரத்துக்கு முந்தியிருக்கவேண்டும் என்று சொல்லுவது போலும். இதை எத்தேசத்து வித்வான்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; மேலும் அவ்வாறு சொல்லுகிறவர்களுக்குச் சரித்திர ரகஸ்யமே தெரியாதென்றும் அவர்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்றும் அசட்டை பண்ணி விடுவார்கள்.

பிள்ளையவர்கள் "இங்ஙனம் பண்டிதர்கொண்ட கொள்கை நாம் மகாபாரத ராமாயணங்களைப் பற்றி எழுதியவற்றில் எடுத்துக் கூறிய கொள்கையோடு ஒற்றுமை யுடைத்துப்போற் றோன்றினும் அஃது உண்மையில் அங்ஙன மன்று'' என்று எடுத்துக்காட்டுகின்றார்.

என் கொள்கையை அவர்கள் ஒப்புக்கொள்ளவே வேண்டாம். இராமாவதாரத்துக்கு முன் கிருஷ்ணாவதாரம் என்று வாதிப்பவர்கள் "நேர் நின்று காக்கை வெளிதென்பார்'' போலும். அவர்கள் என் கொள்கையை ஒப்புக்கொள்வதைவிட ஒப்புக்கொள்ளாமலிருப்பதேதான் எனக்குமரியாதை. ஆனால் அவர்கள் எழுதிய வசனத்தின் அருத்தந்தான் இன்னதென்று எனக்குப் புலப்படவில்லை. என்கொள்கை அவர்களுடைய கொள்கைக்குச் சில விஷயங்களில் ஒத்திருந்தும் அப்படியன்றென்றால் என்ன அருத்தம்? எனது கொள்கைக்கு ஆதாரமாக நான் கொண்ட ஏழு காரணங்களைச் சுருக்கி எல்லாருமறிய இங்குக் காட்டுகிறேன் :—

Two-column comparison: இராமாயணம் (left) / மகா பாரதம் (right).

## இராமாயணம்.

1. மகாபாரதக் கதை இராமாயணத்தில் ஓரிடத்திலேனும் காணப்படவில்லை.

2. இராமாயணத்திற் பரத கண்டத்தின் தென்பாகம் எல்லாம் தண்டகாரணியம் முதலான அரணியங்கள்.

3. சீதாதேவி.

4. ஸ்ரீராமர் காலம் திரேதாயுகம்.

5. மலை மரம் கல் இவைகளைக்கொண்டே இராமாயண யுத்தம் பெரும்பாலும் நிகழ்ந்தது.

6. இராமாயணத்தில் இரண்டொருபாகத்தில் யவனர் முதலிய மிலேச்ச ஜாதியார் இருந்தனரென்பது தெரியவருகிறது.

7. இராமாயணம் முதலில் வாய்மொழியாகப்பரவியது.

## மகா பாரதம்.

1. இராமாயணக்கதை மகாபாரதத்தில் 3, 4, இடங்களிற் காணப்படுகின்றது.

2. மகாபாரதத்தில் தென்பாகமெல்லாம் ஆந்திரம், கர்ணாடம், சோளம், பாண்டியம் முதலிய தேசங்களிருந்தனவென்பதும், அவற்றின் அரசர்கள் பாண்டவர்களுடைய சபைக்கு வந்திருந்தனர் என்பதும் காணப்படுகின்றன.

3. த்ரௌபதை ராஜ்ய தந்திரம், மதவிஷயம் இவைகளிற் சீதையைவிடத் தேர்ச்சி யடைந்தவள். த்ரௌபதையின் சார்வாகஸம்வாதம் சத்தியபாமைக்கு அவள் புகட்டிய அறிவு இவைகளினால் நாகரிகம் விருத்தியடைந்த பிற்காலத்தில் த்ரௌபதி யிருந்திருக்கவேண்டும் என்பது.

4. பாண்டவர்கள் துவாபர யுகத்தின் அந்தத்திலும் கலியுகம் ஆரம்பிக்கும்பொழுதும் இருந்தனர்.

5. மகா பாரதத்திலோ நாகரிக யுத்தம்; பத்மவ்யூகம், சகடவ்யூகம் முதலிய பலவித வ்யூக வகுப்புக்கள் காணப்படுகின்றன.

6. மகா பாரதத்தில் அநேக பாகங்களில் இச்சாதியார்களிருந்தனரென்பதும் அவர்கள் பாஷையை விதுரர் யுதிஷ்டிரர் முதலியவர்கள் பேசினரென்பதும் தெரியவருகின்றன.

7. மகாபாரதம் விநாயகர் எழுதியது.

சரித்திரக்கண்ணைக் கொஞ்சம் நன்குகத் திறந்துபார்க்கும் எவர்க்கும் இக்காரணங்களால் இராமாயண கதையின் காலம் முன் என்றும் மகாபாரத கதையின் காலம் பின் என்றும் கரதலாமலகம்போல்விளங்கும். மகாபாரதத்தில் அநேக ராச்சியங்கள் தக்ஷிணத்தில் இருந்தனவென்றும் யவனர் முதலிய ஜாதியார் அநேகர் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளதே என்னின் "இவைகளெல்லாம் பிற்காலத்திற் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாகங்களிற் காணப்படுகின்றன" என்றுபிள்ளையவர்கள்சொல்லுவது அவர்கள்வடநூலைப் படித்துச் சொல்லுவதாகப் புலப்படவில்லை. ஏனெனில் இவைகள் வரும் இடங்கள் பொது நடைக்கு ஒத்திருக்கின்றனவேயன்றிப் புது நடையாகக்

காணப்படவேயில்லை. நல்லது, அவர்களுடைய கோணல் வழியை ஒப்புக்கொண்டே, இராமாயணத்தில் தக்ஷிண பாகம் அரணியமாகக் கூறப்பட்டிருக்கின்றதே என்றால், அதற்கு அவர்கள் என்ன மறுமொழி சொல்லுவார்களோ தெரியவில்லை. ஒருகால் அநேக தேசங்கள் சொல்லியிருந்த சருக்கங்களை நமது நாட்டார்கள் ஒளித்துவிட்டார்கள் என்று சொல்லுவார் போலும்!

இராமாயணம் மகாபாரதம் இவ்விரண்டு கிரந்தங்களிலும் மிகச் சில இடங்களே பிற்காலத்திற் சேர்க்கப்பட்டவையா யிருக்கலாம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதைப் பற்றிப் பலர் பலவிதமாய்த் தம் தம் மனத்திற்குத் தோன்றியபடி யெல்லாம் எழுதி யிருக்கின்றார்கள். ஆனால் இவ்வாறு சேர்க்கப்பட்ட காரணத்தினாலே ஆதிகிரந்தங்களின் அழகு போகவேயில்லை. கொஞ்சம் கவனமாய்ப் படிக்கின்ற ஒவ்வொருவர்க்கும் இது சேர்க்கை இஃது ஆதிநூலின் பாகம் என்பது நன்றாகவிளங்கும். சேர்க்கப்பட்ட இடங்களை ஒரு பொருளாக எண்ணி ஒருவரும் இது வரையில் இராமாயணம் மகாபாரதம் இவ்விரு கிரந்தங்களையும் சீர்தூக்கிப் பேசினதில்லை. ஆதிநூல்களையே கைப்பற்றிக் கொள்கைகளை ஏற்படுத்துவது இது வரையில் வழக்கத்தில் வந்துகொண்டிருக்கிறது. அஸ்தினாபுரம் வடக்கு ஆகையாற் பாண்டவர்கள் காலம் முன்; அயோத்தி அதற்குத் தென்கிழக்கு ஆகையால் இராமர்காலம் பின் என்பது இவ்விரு தேசங்களும் வெவ்வேறு வம்சத்தின் பிரதான நகரம் என்பதை மறந்து பிள்ளையவர்கள் எழுதுவது போலும். பஞ்சபாண்டவர்கள் திரௌபதி ஒருத்தியை மணந்த விஷயமாய் அநேகபதி விவாகத்தைப் பிள்ளையவர்கள் எடுத்துக்காட்டி அவர்கள் காலம் முற்காலம், இராமர்காலம் பிற்காலம் என்கின்றார். இவ்வழக்கம் பஞ்சபாண்டவர்களை யல்லாது இன்னும் எவ்வளவு பெயர்கள் விஷயமாய் மகாபாரதத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது? இவ்வொரு விஷயத்தைக் கொண்டு மேலைத்தேசத்துப் புலவர்கள் பரிகாஸம் பண்ணுவது போலக் கீழைத்தேசத்துப் புலவராகிய பிள்ளையவர்களும் சொல்லுவது வெகு ஆச்சரியம்! அஃது அப்படியே உண்மையாகவே யிருந்தாலும் அதை நாம் துவாபர யுகத்தின் கடையிற் சிறுபான்மை வழங்கி வந்த ஒருவித விவாகம் என்றால் அதற்கு மறுமொழி என்ன? அதே மகாபாரதத்தில் ஏகபத்நீவிரதம் அதிகமாக விளங்குகின்றதே; அன்றியும் அநேகபதி விவாகம் ஸித்தாந்தமாக ஏற்படவில்லையே. இஃது ஒன்றே பெரு வழக்கமாக மகாபாரதமெங்கும் இவ்வாறிருந்தால் அநேக பதி விவாகம் அக்காலத்துச் சித்தாந்தம் என்று ஒப்புக்கொள்ள இடமாகும். இப்பொழுது நீலகிரியில் வசிக்கும் தொதுவர்களுக்குள் அநேகபதி விவாகம் வழக்கமா யிருக்கிறது. ஆகையாற் பாண்டவர்கள் தொதுவர்கள் என்பர்போலும். அவ்வாறே சிலமேலைநாட்டுப் புலவர்கள் சொல்லியு மிருக்கிறார்கள். அஸ்தினாபுரம் அவ்வளவு வாஸ

யோக்யமன்று என்றும் ஆகையாலேயே பாண்டவர்களுக்கு முன் இந்தியா வுக்கு வந்த சூரியவமிசத்தரசர்கள் அஸ்தினபுரத்தைத் தாண்டி அயோ திக்கு வந்தார்கள் என்றும் அவர்களுக்குப் பின்வந்த சந்திரவமிசத்தரசர்கள் கிழக்கேபோக வழியில்லாமல் அஸ்தின புரத்திலேயே தங்கினார்கள் என் றும் சொன்னால் அதுவும் எனது கொள்கைக்கு ஓர் ஆதாரமாகும்.

மேற்கூறிய ஞானபோதினி 51-ஆவது பக்கம் 6-ஆவது வரியில் ஆரம் பித்து 52-ஆம் பக்கம் 6-ஆவது வரியில் அதை முடித்துப் பிள்ளையவர்கள் 33 வரிகளிற் "பண்டிதர் தமது கொள்கைக்கு ஆதாரங்களாகக் காட்டும் கார ணங்கள் எழும் அவர் கொள்கையை வலியுறுத்தாமை கண்டு கொள்க" என்று சாதித்துவிட்டார்கள். இது "நாம் சொல்லுவதைக் கேளுங்கள், அவன் சொல்வதைக் கேட்கவேண்டாம்" என்பது போலும். நான் சொல் லும் இரண்டொரு காரணங்களுக்கு ஆதாரமான இடங்கள் பின்னாற் சேர்க் கப்பட்ட பாகங்கள் என்று ஒரே எதிர்மறை முகமாக என்னைத் தடுப்பதைக் காட்டிலும் தாம் கொண்டிருக்கிற அபிப்பிராயங்களுக்குக் காரணங்களைத் திட்பமாய் விதிமுகமாகத் தாமாகவே எடுத்துக்காட்டி நிரூபித்தால் அது பிள்ளையவர்களுடைய ஸம்ஸ்கிருத பாண்டித்தியத்திற்கு அழகாயிருக்கும். மேலைநாட்டுப்புலவர்கள் நமது தேசாபிமானிகளல்லர்; மதாபிமானிகளுமல் லர். அவர்கள் சொல்லுவ தவ்வளவையும் விவேகிகள் அங்கீகரிக்க முடியாது. இராமரே நிஜபுருஷரல்லர் நாகரிகத்துக்கு ஒரு பெயர் என்றும், சீதையே ஸ்திரீயல்லள் கலப்பை என்றும், அவர்களில் ஒருவர் எழுதி இராமாயணம் என்றால் தென்தேசத்துக்கு நாகரிகமும் வியவசாயமும் பரவ ஆரம்பித்த ஒருகதை என்கிறார். இவையெல்லாம் நாம் ஒப்புக்கொள்ளத்தக்கவையோ? பிள்ளையவர்கள் 'இராமாவதாரம் முன், கிருஷ்ணாவதாரம் பின்' என்று சொல்லுகிறாரா? அல்லது 'இராமாவதாரத்துக்கு முன் கிருஷ்ணாவதாரம்' என்கிறாரா? அவர்கள் கொள்கை கிருஷ்ணாவதாரம் முன் என்றிருக்குமா யின் அவருடன் இனி நமக்கு வழக்கே யில்லை. மற்றெவருக்கும் அப்படியே யாகும். அக்கொள்கைக்கு ஸர்வாதிபதி அவர் ஒருவரே.

பாலகாண்டத்திற் சில கட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம். முதலி ரண்டு சர்க்கங்கள் ஒருகால் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டிருப்பினு மிருக்க லாம். பாலகாண்டம் முழுவதும் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டதென்று பிள்ளையவர்கள் தாம் மேலைநாட்டு ஜாக்கோபியாருடன் சேர்ந்துகொ ண்டு முதல் முதல் எடுத்துக் கூறுகிறார்கள் என்றெண்ணுகிறேன். உத்தர காண்டம் வால்மீகிசெய்யவில்லை என்று சிலர் ஒப்புக்கொண் டிருக்கிறார் கள். பாலகாண்டமும் வால்மீகியுடையதன் றென்பதை நான் இப்பொழுது தான் கேள்விப்படுகிறேன். சிற்சில கட்டங்கள் பின்பு சேர்க்கப்பட்டாலும் ஆதி காவியத்தின் அழகு பாலகாண்டத்திற் காணப்படுகிறது. 'ஒரு தடவை

கூறியதனையே மறித்தும் மறித்தும் கூறுவதனாற் கதையின் இனிமையும் பாழ் பட்டுக்கிடக்கின்றது' என்று பிள்ளையவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றார். இது மூலகிரந்தத்தைப் படியாமல் மொழி பெயர்ப்பிற் படித்த தோஷத்தின் கொள்கையாகவே யிருக்கவேண்டும். ஏனெனில், மூலகிரந்தத்திற் படித்தால் என்னதான் மறித்து மறித்துக் கூறுவதாக இருந்தாலும், புதுமையாகவே தோன்றும். யுத்த காண்டத்தில் மட்டும் பல யுத்தங்களை ஒரே மாதிரியாக முனிவர் எழுதியிருக்கிறபடியால் இரண்டோர் இடத்தில் ஏன் இப்படி எழுதவேண்டும் என்று தோன்றும். என்ன இருந்தபோதினும் மறித்து மறித்துக்கூறி முனிவர் கதையைப் பாழாக்கினதாக நாம் இது வரையிற் கேள்விப்படவேயில்லை.

* டாக்டர் ஏ. ஏ. மாக்டானெல் என்ற மேலை நாட்டுப்புலவர் போன வருஷம் (1900) ஸம்ஸ்கிருத பாஷையின் சரித்திரம் என்று ஒருபுஸ்தகம் எழுதிப் பிரசித்தப்படுத்தினார். அம்மேலை நாட்டுப்புலவர் சொன்ன சில விஷயங்களைப் பிள்ளையவர்கள் மேற் கூறிய செப்டம்பர்மீ ஞானபோதினியில் அழகாய்ப் பெரும்பாலும் மொழிபெயர்த்துக்காட்டி அதனுடன் நில்லாமல் என் கொள்கையைத் தடுக்க ஆரம்பித்தார். சற்று நிதானித்து அதேபுஸ்தகத்தைப் பிள்ளையவர்கள் முற்றிலும் கவனித்திருப்பார்களேயானால் இங்ஙனம் செய்திருக்கமாட்டார். ஏனெனின் அந்த டாக்டர் மாக்டானெலே என் கொள்கையை அனுசரித்துப் பலஆதாரங்கள் சொல்லியிருக்கிறார். இரண்டொன்று இங்கு நான் காட்டுகிறேன். அப்புஸ்தகத்தையே எல்லாரும் படித்து அறிந்து கொள்ளுவது நலம். அந்த டாக்டர் இக்ஷ்வாகு, தசரதர், ராமர் என்ற பெயர்கள் ருக்வேதத்தில் இராமாயணகதையின் சம்பந்தமின்றிச் சொல்லப்பட்டுளதென்றும் அவ்வாறே மகா பாரதத்தின் கதாநாயகர்களிற் சில பெயர்கள் யஜுர்வேதத்தில் வந்துளவென்றும் எழுதியிருக்கிறார். இது ராமாயணம் பழையது என்பது போலும். மறித்து மறித்துக் கூறிக் கதையை முனிவர் பாழாக்கினதாகப் பிள்ளையவர்கள் கொள்ளும் கொள்கைக்கு விரோதமாய் மாக்டானெல் அவர்கள் இவ்விராமாயணத்தை வெகுவாகப் புகழ்ந்து கல்லும் காவேரியும் உள்ள வரையில் விளங்கப்போகும் கிரந்தம் இஃது ஒன்றே என்றும் கோடிக்கணக்காய் ஜனங்கள் ஆனந்தத்துடன் படித்துவரும் கிரந்தம் இஃது ஒன்றே என்றும் மேலை நாட்டார்களுக்கு விவிலிய நூல் போல ஹிந்துக்களுக்குள் விளங்கும் கிரந்தம் இவ்விராமாயணம் என்றும் சொல்லி முடிக்கின்றார். இதுதான் வடமொழியின் உருசியை அறிந்ததற்கு அழகு.

ச. ம. நடேச சாஸ்திரி.

---

* Dr. A. A. Macdonell.

## II.

சென்ற மாதத்து ஞானபோதினிப் பத்திரிகையில் **ம-ா-ா-ஸ்ரீ, தீ. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் (பி. ஏ.)** 'இராமாயணம்' என்ற தலைப்புக் கொடுத்து எழுதிய சில பக்கங்களை, விஷய கௌரவத்தைப் பற்றியும் எழுதியவர் பெருமையைக் கருதியும் ஒருமுறைக் கிருமுறை நன்ருகப் படித்துப் பார்த்தோம். பார்த்தபொழுது பிள்ளையவர்கள் எழுதியுள்ள விஷயங்கள் யாவும், அவர்கள் தாமாகவே இராமாயணம், பாரதம், புத்தஜாதகக் கதை, மற்றும் பல் பௌத்த நூல்கள், சமணநூல்கள், கிரேக்க நூல்கள், ஜாக்கோபியார் எழுதியநூல் முதலிய பல நூல்களையும் படித்துப் பார்த்து நுட்பமாக ஆராய்ச்சி செய்து சாரமாகப் புதிதாய் எழுதிப் பலர்க்கும் பயன்பட வெளியிட்டவை யென்றே யெண்ணிருேம். அதனுல் அவரது வடமொழித் தேர்ச்சி, பிறமொழிப்பயிற்சி, நூலாராய்ச்சி முதலியவற்றைப் பற்றி மிகவும் அரியவையென வியக்கவும் நேர்ந்தது. அன்றியும் ஆஸ்திகர் நாஸ்திகர் ஆஸ்திகநாஸ்திகர் என்ற மூன்றுபகுப்பில் எவ்வகை நிலையை மேற்கொண்டும், தேசாபிமான பாஷாபிமான மதாபிமானங்களை எவ்வளவு வரை கைவிடாதும், இவை துணிந்து எழுதப்பட்டனவோ வென்ற சங்கையும் நிகழ்ந்தது. பின்பு ஒருகால் தற்செயலாய் எமது கைக்கு எட்டின ஓர் புதிய * இங்கிலீஷ்ப் புத்தகத்தைப் படித்துவந்த பொழுது பிள்ளையவர்கள் எழுதியவற்றுட் பெரும்பாலன அதிற் காணப்பட்டன. பிள்ளையவர்கள் எழுதியவற்றிற் பண்டித நடேசசாஸ்திரியார் சம்பந்தமாக எழுதிய கடைசிப்பக்க மொழிய மற்றை முதலாறு பக்கங்களிலுள்ள விஷயங்கள் பலவும் மேற் குறித்த இங்கிலீஷ்ப் புத்தகத்தில் ஏ. ஏ. மக்டானெல் துரையவர்கள் (எம் - ஏ) எழுதியவையாகவே யிருந்தன. (சென்ற வருஷத்திறுதியில் வெளிப்பட்ட நடேசசாஸ்திரியார் புத்தகத்தைப் பற்றிச் சென்ற வருஷத் தொடக்கத்திலேயே வெளியான மக்டானெல் புத்தகத்தில் யாதொன்றும் எழுதப்பட்டிராதன்றே!) இது கண்டவுடனே, எமக்கு முதலிலுண்டான எண்ணமும் வியப்பும் சங்கையும் முற்றும் நீங்க, வேறுவகையான எண்ணங்களும் மிக்க வியப்பும் ஆசங்கையும் அதிகமாத் தோன்றின. அன்றியும், யாம் இளமையில் ஒருகாற் படித்த "பிரதாப முதலியார் சரித்திர"த்திலுள்ளதொரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது; அது வருமாறு :—

"ஒரு புலவர், நான் பாடின ஒரு கவியைப் பார்த்து, அதை நான் கம்பராமாயணத்திலிருந்து திருடிக்கொண்டதாகக் குறை கூறினர். 'நான் திருடவேயில்லை' என்றேன். அவர் அந்தக்கவி கம்பராமாயணத்தி லிருப்பதாகக் காட்டினர். நான் உடனே அவரைப்பார்த்து, 'நான் அந்தக்கவியைக் கம்ப

* "A. History of Sanskrit Literature by Arthur A. Macdonell, M.A., Ph. D."

ராமாயணத்திலிருந்து திருடி யெடுத்துக் கொண்டிருப்பேனுறு் பிறகு அந்தக்கவி கம்பராமாயணத்தில் எப்படி யிருக்சக்கூடும்? ஆகையால், நான் திருடவில்லை யென்பதற்கு அந்தக்கவி கம்பராமாயணத்தி லிருப்பதுவே சாக்ஷி' என்று மெய்ப்பித்தேன்" என்பது.

யாம் இப்படி மனம் சபலப்பட்டதற்குக் காரணம், பிள்ளையவர்கள் தமது கையெழுத்திட்டு எழுதியதில் மக்டானெல் பெயர் எங்குங் காணப் படாமையே. பிறர்பொருளைத் தம் பொருளாக் கருதவேண்டும் என்ற நீதி நூற் கொள்கைக்கு விபரீதார்த்தஞ் செய்வார்போன்று, பிறர் எழுதியவற் றை அப்படியே தாம் எடுத்துக்கொண்டு தமது சொந்தம்போலவே வெளி யிடுதலைச் சில சிறு புலவர்கள் தமது வழக்கத்தில் ஒருசார் வைத்துக்கொண் டிருப்பினும், இங்கிலீஷ்ப் பாஷையிலுந் தேர்ந்து நாகரிகம் முதிர்ந்த பிள்ளை யவர்கள்போன்ற மெய்ப்புலவர்கள் இங்ஙனஞ் செய்தலை எஞ்ஞான்றும் மர பாகக் கொள்ளாரென்பதே எமது துணிபு. பிள்ளையவர்கள் எழுதியவற்றை யே துரையவர்கள் எடுத்துக்கொண்டனரென எண்ணலராகாதோவெனின், இவ்விருவரும் எழுதின நூல்கள் வெளிப்பட்ட காலத்தின் முன் பின் முறை மை அங்ஙனங்கொள்ள இடங்கொடுக்கவில்லை யென்பது தேற்றம். ஒருவர் எழுதியதை மற்றொருவர் பாராமலே இருவர்க்கும் ஒரே மாதிரியான எண் ணம் தத்தம் நூலாராய்ச்சியால் தனித்தனி ஜனித்திருக்கலாமே யென்றால், தற்காலத்தில் அவ்வாறு கொள்ளுதலொன்றே இன்னோரன்னவற்றிற்கெல் லாம் ஏற்ற வகையென அமைக்க. மேலும் பிள்ளையவர்கள் தாம் எழுதியதில் யாண்டும் பிறர் கூற்றுகீ வெளியிடாமையால், இங்ஙனங் கருதுதல் தவரு காது. ஜாக்கோபியார் எழுதியவற்றுட் சிலவற்றை மாத்திரமே தமது பெரு நூலில் ஒருசார் எடுத்தாண்ட மக்டானெல் துரையவர்கள் அந்த ஜாக்கோபி யாரது பெயரை மறவாமல் ஒருமுறைக்குப் பலமுறை காட்டியிருக்க, அது கண்ட பிள்ளையவர்கள் தாம எழுதியவற்றுள் முக்காலே யரைக்காற் பங்கும் மக்டானெல் எழுதியவையாகவே யிருந்தால், அத்துரையவர்கள் பெயரை எங்குங் காட்டாது ஒளித்திடுவரோ? இதனால், நடேச சாஸ்திரியார் சம்ப ந்தமாகப் பிள்ளையவர்கள் எழுதிய சிலவற்றிலும், நிகழ்ந்த ஏப்பிரல் மாதத் தில் மகா பாரதத்தைக் குறித்துப் பிள்ளையவர்கள் எழுதிய விஷயங்களிலும் இப்படிப்பட்ட ஐயம் நிகழ இடமுண்டாகாமற் போகாது. சிறிது காலத்து க்கு முன் வெளிப்பட்டதொரு புறத்தேசத்து நூலை நாடிப்படித்து அதிலி ருந்து சிலவற்றை முக்கியமாத் தேர்ந்து சிரமமெடுத்துக்கொண்டு மொழி பெயர்த்துப் பலர்க்கும் உதவ வெளிப்படுத்தினரெனக் கொண்டாலும், அந்த மகோபகாரத்துக்காகப் பிள்ளையவர்களுக்குத் தமிழுலகம் வந்தனஞ் செலு த்தக் கடமைப்பட்டதாயிருக்கிறது. இஃது எவ்வாறுயினும் ஆகுக. இனி, விஷய சம்பந்தமாகச் சிறிது நிகழ்த்துவோம்.

சூதர்கள் வார்த்தையை ஆதாரமாகக்கொண்டு வால்மீகி இராமாயணஞ் செய்யவில்லை ; நாரதருபதேசத்தை முக்கியமாக்கொண்டே நூல் செய்தனர். (நாரதரையும் ஒருசூதரென்பர் போலும்!) குசீலவர்கள் பெயரால் இராமபுத்திரர்கள் குசலவரெனப்பெயர்பெறவில்லை; குசலவர் தொழிலாற் குசீலவரென்ற பெயர் தோன்றிய தென்னலாம். ஏழுகாண்டங்களும் வால்மீகி செய்தனவே ; முதலிறுதிக்காண்டங்கள் பின்பு சிலராற் சேர்க்கப்பட்டனவல்ல. ஆறுங்காண்டத்தோடு நூல் முடியவில்லை; ஏழாங்காண்டத்தோடேயே முடிகிறது. பாலகாண்டத்திலுள்ளவற்றோடு பின்வருங் காண்டங்களிலுள்ளவை முரணுகின்றனவில்லை. இரண்டு அநுக்கிரமணிகைகளும் ஆதிகாலத்திற் செய்யப்பட்டனவே. இப்பொழுது உள்ள பாலகாண்டத் தொடக்கம் நூல் தொடக்கமே; அயோத்தியாகாண்டத் தொடக்கமோ இரண்டாவது காண்டத்தின் தொடக்கம். நூலினழகுகெடவுமில்லை; கதையினினிமை பாழ்படவுமில்லை. திரிகாலஞானியான வால்மீகிக்குக் கிரேக்கர் முதலியோரைப் பற்றித் தெரிந்திருக்கத் தடையில்லை; ஆயினும், கிரேக்கரே யவனரென்பது என்ன நிச்சயம்? யவனரைப் பற்றி இராமாயணத்திற் கூறியுள்ள பாகங்கள் புதிதாய் இயற்றிச் சேர்க்கப்பட்டவையல்ல. பாண்டவர் காலம் இராமன் காலத்துக்கு மிகவும் பிந்தியதே. அநேகராச்சியங்கள் தக்ஷிணத்திலிருந்தன வென்பது மகாபாரதத்திற் புதிதாய்ச் சேர்க்கப்பட்டதன்று. விநாயகர் பாரதமெழுதியவரலாறு பண்டையதே. இவ்விஷயங்களை அநேகம் பிரமாணங்களைக் கொண்டு எளிதிற் சாதித்து இவற்றிற்கு விரோதமான கொள்கைகளைச் சுலபத்தில் மறுக்கக்கூடும்.

ஆயினும், இந்த வாதம் தொடங்குமுன் யாம் சில விஷயங்கள் கேட்டறிய வேண்டியிருக்கின்றன ; அவை யாவையெனின்,—நமது பிள்ளையவர்கள் சுருதிஸ்மிருதி இதிகாச புராணங்களை யெல்லாம் பிரமாணமாகக் கொள்ளுகிறாரா? அல்லது, எவ்வளவு வரையிற் கொள்ளுகிறார்? பிரதியக்ஷ அநுமானப் பிரமாணங்களே தவிரச் சப்தப் பிரமாணமும் அவர்க்கு உடன்பாடுதானா? இராமகிருஷ்ணர்களைத் தமது தெய்வமாகக் கொண்டாடாவிடினும் விஷ்ணுவினவதார மென்றாயினும் ஒப்புக்கொள்ளுகின்றனரா? மகாபாரதத்திற் கூறப்பட்ட பாண்டவர் செய்கைகள்பல கிருஷ்ணசகாயத்தோடு நடந்தன வென்பது அவரால் அங்கீகரிக்கப்படுகின்றதா? அவர் மேற்கோளாகக் கொள்ளும் இராமாயண பாரதங்கள் வடநூல்களேயோ? அன்றி, அவற்றின் மொழிபெயர்ப்புத்தாமோ? அவருக்கு வடமொழிப் பயிற்சியுண்டா? இவற்றிற் கெல்லாம் சரியான விடை தெரிந்து கொள்வதோடு, இராமாயணத்தில் இன்னின்ன காண்டத்தில் இன்னின்ன சர்க்கத்தில் இன்னின்ன சுலோகங்கள் புதியவை அல்லாதவை பழையவை யென்பதைப் பற்றியும், பாரதத்திலும் எந்தெந்தப் பருவத்தில் எந்தெந்த உபபருவத்தில்

எந்தெந்த அத்தியாயத்தில் எந்தெந்தச் சுலோகங்கள் பழையன? எவ்வெவை புதியன? என்பதைக் குறித்தும், பிள்ளையவர்களிடமிருந்து அவர்கள் கையெழுத்துப்பட ஒரு விவரக் குறிப்பு வாங்கிக் கொண்டே இதில் தலையிட வேண்டி யிருக்கிறது. இல்லாவிடின், நாம் சிரமப்பட்டு அநேக மூலப்பிரமாணங்களை நாடி யெடுத்துக்காட்டியபின் 'அவை நமக்கு உடன்பாடல்ல' வென்றும், 'பிற்காலத்துப் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாகங்களேயன்றி ஆதியில் தோன்றியவையல்ல' வென்றும், 'மேலைத்தேயத்தார் கூற்றையே தழுவினேம்' மென்றும் கூறத்தொடங்கி விட்டால், என் செய்வது? இவற்றிற் கெல்லாம் அடுத்த சஞ்சிகையில் ஏற்றவிடை பிள்ளையவர்கள் பெயரால் வெளிவந்தால், அதற்கேற்பப் பின்பு நாம் சில கூறலுறுவோம். பிரமாணங்களை முதலில் நிச்சயித்துக்கொண்டு அதன் பின்பு பிரமேய விசாரஞ் செய்யத்தொடங்குதலே மரபு.

'மகாபாரதத்தில் **ஏழாவது பருவத்தில்**' இராமாயண யுத்தகாண்டச் சுலோகமொன்று வந்துள்ளது' என்று மக்டானெல் புத்தகத்திலிருக்கிறது. பிள்ளையவர்களோ 'மகாபாரதத்திற் **கர்ணபருவத்தில்** இராமாயணத்து யுத்தகாண்டத்திலிருந்து ஒரு சுலோகம் எடுத்தாளப்பட்டுளது' என எழுதியுள்ளார். **ஏழாவதுபருவம் துரோணபருவம், கர்ணபருவமோ எட்டாவது.** இந்த மாறுபாடு, மொழி பெயர்க்குங்கால் நேர்ந்த பிழையோ? அல்லது, இராமாயணத்திற் பாலகாண்டம் போலப் பாரதத்திலும் முதலில் ஏதேனும் ஒரு பருவம் புதிதாய் விலக்கத் தக்கதோ? அன்றி, "முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி" என்ற வழிநூலிலக்கணம் வழிநூல் வகைகளு ளொன்றாகிய மொழிபெயர்ப்பிலுங் கொள்ளப்பட்டதோ? மற்று, முதனூலிலுள்ளது வழுவென மாற்றப்பட்டவாறோ? இனி, தாமாக வேறென்று கண்டபடியோ? இன்னதென்று விளங்கவில்லை. பிள்ளையவர்கள் இதனைத் தெரிவிப்பதோடு, அந்தச் சுலோகம் இன்னதென்றும், அப்படியே புத்த ஜாதகக் கதையிற் சேர்த்தெழுதப்பட்ட இராமாயண சுலோகமும் இன்ன தென்றும் தெரிவித்தால், அவற்றின் தன்மையும் ஆராயப்படும். 'இராமாயணஞ் செய்துள்ளது **சுலோகத்தால்.** அதுவே சம்ஸ்கிருதப் பாக்களுளெல்லாம் செய்ய எளிதானது' என்று காட்டிய வாக்கியத்தின் கருத்தைப் பிள்ளையவர்கள் விவரித்தெழுத விரும்புகிறேம். மற்றும், துரையவர்கள், வால்மீகியாச்சிரமம் கங்கையின் தென்கரையிலுள்ள தென்று உத்தர காண்டத்தின் **நாற்பத்தைந்தாஞ்** சருக்கத்திற் கூறியுள்ளதாகக் கூறுகிறார். பிள்ளையவர்களோ, தொடக்கத்திலேயே, **ஐம்பத்தேழாவது சருக்க** மென்கின்றார்; இவ்வேறுபாடு ஏன் வந்தது? இதன் காரணத்தையும், ஐம்பத்தேழாஞ் சருக்கத்திற் கூறியுள்ள இடத்தையும் பிள்ளையவர்கள் எடுத்துக் காட்டுவாராக.

நாட்டார் நகரத்தார், ஆண்பாலார் பெண்பாலார், பெரியோர் சிறியோர், முனிவர்கள் புலவர்கள், கற்றவர் கல்லாதார், அகச்சமயிகள் புறச்சமயிகள், இத்தேயத்தார் பிறதேயத்தார் ஆகிய அனைவரும் தொன்று தொட்டுக் கூறி வருங் கொள்கைக்கு இயையப் பண்டிதர் நடேச சாஸ்திரியார் கூறிய கொள்கையை மறுத்தற்குப் பிள்ளையவர்கள் காட்டிய காரணம் இரண்டே. i. அயோத்தி அஸ்தினாபுரத்துக்குத் தென்கிழக்கிலிருத்தல். இதைக் கூறும்போது பிள்ளையவர்கள் தாமே 'இப்போது வழக்காற்றிலுள்ள கொள்கை. இஃதுண்மையாயின்' என்று துணிவில்லாமற் சங்கைக்கு இடங்கொண்டே யெழுதியிருத்தலால், 'அவர் தமது கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டுங் காரணம் அவர் கொள்கையை வலியுறுத்தாமை கண்டு கொள்க.' வழக்காற்றிலுள்ள கொள்கை யென்பதில் ஆக்ஷேபத்துக்கிடமுண்டு. ஆரியர்கள் ஓரிடத்திலிருந்து ஒரே காலத்தில் ஒருங்கே பிரயாணப்பட்டு ஒரே வழியால் வந்து ஒவ்வோரிடத்திற் சிற்சில காலந் தங்கிப் பின்பு அவ்வனைவரும் ஒருசேரத் தம்தம்மரபினருமுட்பட அவ்விடத்துக்குஅப்பாற்சென்றனரென்றும், பின்புஅவர்களில்எவரும் எக்காலத்தும் எக்காரணத்தாலும் வடக்கேசென்றிலரென்றும் சரித்திரசித்தாந்தம் ஏற்பட்டால்மாத்திரமே பிள்ளையவர்கள்கொள்கை நிலைக்குமேயொழிய மற்றைப்படிநிலையுறாது. சரித்திரத்துணிவு அன்னதன்றென்பது தேற்றம். அன்றியும், அயோத்தி இராமன் காலத்திலேயே நூதனமாய் ஏற்பட்டதொரு நகரமன்று. இக்ஷ்வாகு காலம் முதல் தொன்றுதொட்டுள்ளதன்றோ? விரிப்பிற் பெருகும். ii. அநேகபதிவிவாகத்திற்குப் பிந்தினது ஏகபதி விவாகமென்பது. இதிலும் பல ஆக்ஷேபங்கட்கு இடமுண்டு. அன்றியும், பாரத சரித்திரம் முழுவதிலும் ஏகபதி விவாகமென்பது கூறப்படாமல் அநேகபதி விவாகமே எங்குங் கூறப்பட்டிருந்தாலன்றோ அது பிள்ளையவர்கள்கொள்கைக்குச்சாதனமாம். அப்படியில்லையே. துரியோதனன்தாயும் அவன்மனைவியும் அவன்தங்கையும் சுபத்திரை உத்தரையாதிய வனையோரும் பலரை மணஞ்செய்து கொண்டதாகப் பாரதங் கூறிற்றிலதே! என் செய்வது? மற்றும், பிள்ளையவர்கள் சொல்லுகிறபடி கொண்டால், இப்பொழுதும் சிற்சில விடங்களில் அநேகபதிவிவாகம் நிகழ்தலால் அது செய்பவர்கட்கெல்லாம் பிந்தினது இராமன் கால மென்றன்றோ சொல்ல வேண்டிவரும்? அதிவ்யாப்தி அவ்யாப்தி முதலிய குற்றங்கட்கு இடமில்லாமல் ஆராய்ச்சி செய்தெழுதினால் நன்றாயிருக்கும். திரௌபதியின் அநேகபதிவிவாகந் தானும் தற்காலப் பொதுவழக்குப்படி நிராக்ஷேபமாக நடந்ததென்று சரித்திரம் உண்டோ? உலகவியல்புக்கு மாறானதென அச்செயல் முதலில் மிகவும் ஆக்ஷேபிக்கப்பட்டதென்றும், பின்பு தக்க சில நியாயங்களாற் சிறப்பாக அங்கீகரிக்கப்பட்டதென்றும், அவ்வாறிருந்தும் பின்பு அதனைச் சிற்சில சமயங்களிற் சிற்சிலர் இழித்துக் கூறினரென்றும் பாரதம் கூறுகிறதே! அநேகபதிவிவாகமே அக்காலத்து வழக்காறாயிருந்

தால் சர்வஜன சம்மதமான அஃது எங்ஙனம் சிலராலேனும் இகழப்படும்? இத்தன்மையவற்றை யெல்லாம் உணர்வுடையார் சீர்தூக்கிக் குற்றத்தை விலக்கிக் குணத்தைக் கொள்வாராக.

மேல் யாம் கேட்ட சிலவற்றிற்கு விடை வந்த பின்பு எழுதவேண்டியவை எழுதப்படும்.

திரு. ஈ. வேங்கடாசாரியன்.

---

# THE BAROMETER.

## வாயுமானி.

இப்பூமண்டலம் வாயுவாற் சூழப்பட்டிருக்கிற தென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் அவ்வாயு எவ்வளவு உயரம் பரவியிருக்கிறதென்பது யாவரும் அறியாத விஷயம். அஃது ஏறக்குறைய ஐங்காத உயரம் மட்டுமே பரவியிருக்கிற தென்பது சிலர் கொள்கை. இது தவறு. திடதிரவ வாயுக்களென்னும் மூவகைப் பதார்த்தங்களுள் வாயு பதார்த்த மென்பது வெளியிட மெங்கும் வியாபிக்குந் தன்மையையுடையது. பூமியைச் சூழ்ந்துள்ள வாயுவும் மேல் நோக்கிச் செல்வதன்கண் வெளியிடம் எல்லையிலதாக விருத்தலின், தானும் வரையறை யின்றி வியாபிக்கிறதுமென்பது வெளிப்படை. இவ்வாறு வரையறை யின்றி வியாபியாநிற்குமாயினும் இத்துணை வாயுவும் பூமியின் மீது உறுத்தும் அழுத்தல்வலியினைச் சிறிதும் பிசகாமல் அளவிடுதல் கூடும். * வாயுவின் அழுத்தல்வலியினை யளவிடுதற்கு வேண்டிய கருவியினையே 'வாயுமானி' என்று சொல்வார்கள்.

இருமுனையுந் திறந்துள்ளதோர் கண்ணாடிக்குழாயினை யெடுத்துக்கொள்ளுங்கள். அதன் ஒரு முனைக்கண் காகிதத்துண்டைப் பொருத்தி மற்றொரு முனையின் வழியாக உள்ளிருக்கும் வாயுவினை உறிஞ்சினாற் காகிதத்துண்டு கீழ் வீழாமற் கண்ணாடிக் குழாயோடும் ஒட்டிக்கொள்ளுகிறது. இதற்குக் காரணமென்ன? உள்ளிருக்கும் வாயுகுறையவும் வெளியிலுள்ளவாயு உட்புக முயல்வதன்கட் காகிதத்துண்டை உட்புறமாக அழுத்துகிறது. கண்ணாடிக் குழாயினை எப்புறமாக நிறுத்தினும் இவ்வாறே காகிதத்துண்டு அழுத்தப்படுவதைக் காண்பீர்கள். இதனால் வாயுவிற்கு எப்புறத்தும் இவ்வழுத்தல்வலி யுண்டென்பதறிகிறோம்.

பிறகு ஒரு கண்ணாடிப்பாத்திர மெடுத்து நிறையச் சலம்விட்டு அதன் வாய்ப்புறத்தைக் காகித வட்டையால் மூடிக் கவிழ்ப்பீர்களானால் நீர் சிறி

---

* Atmospheric Pressure.

துங் கீழ்வீழாதிருப்பதைக் காண்பீர்கள். இதற்குக் காரணமென்ன? அப்பாத்திரத்துள்ள நீரின் அழுத்தல்வலியினும் அதிகமாக அட்டையின் கீழ்ப்புறத்தினின்றும் வாயு அழுத்துவதேயாம். பாத்திரத்தைக் குப்புறக் கவிழ்த்ததுபோல மற்றெப்புறங் கவிழ்ப்பினும் நீர் கீழ்வீழாதிருப்பதைக் காண்பீர்கள். இதனால் வாயு எப்புறத்தினின்றும் நீரை வீழாதிருக்கும்படி அழுத்துகிறதென்பது வெளிப்படை. பின்னர் ஒரு கிண்ணத்திற் சலம்விட்டுக் குப்புறக் கவிழ்த்த கண்ணாடிப் பாத்திரத்தை வாய்ப்புறம் சலத்தில் அமிழும்படி வைத்து அட்டையை யெடுத்துவிடுங்கள். இப்போதும் பாத்திரத்துநீர் கிண்ணத்துநீர் மட்டத்திற்கு விழுந்துவிடாமல் மேலாகவே நிற்கிறது. இவ்வாறு அதனை மேல் நிறுத்துவது எது? வெளியிலுள்ள வாயுவே. ஆனால் அவ்வாயு பாத்திரத்து நீரை நேராக அழுத்தவில்லை. வாயு கிண்ணத்து நீரைக் கீழ்ப்புறமாக அழுத்தாநிற்க அந்நீர் அவ்வழுத்தல்வலியோடுங் கண்ணாடிப்பாத்திரத்துநீரை மேற்புறமாக அழுத்துகிறது. அஃதாவது கிண்ணத்து நீர்மூலமாக வாயுவே கண்ணாடிப் பாத்திரத்துநீரை மேல் நிறுத்துகிறது. நீரினும் 13½ பங்கு கனமுள்ள பாதரசத்தினைப் பாத்திரத்தினுங் கிண்ணத்தினுமூற்றினாலும் இவ்வாறே பாத்திரத்துள்ள ரசமவ்வளவையுஞ் சிறிதுங் கிண்ணத்தில் விழுந்துவிடாதபடி வெளியிலுள்ள வாயு தாங்கிக்கொள்ளும்.

இதனால் வாயுவிற்கு அதிகவலியுண்டென்பது விளங்குகிறது. இவ்வளவுதான் அதன் வலி யென்று நிச்சயிக்கக் கண்ணாடிப் பாத்திரத்திற்குப்பதில் ஒரு சதுரங்குலக் குறுக்களவும் ஒரு கஜ நீளமுமுள்ள கண்ணாடிக்குழாய் நிறையப்பாதரசம் விட்டுப் பின்பு அதை விரலால்மூடிக் கிண்ணத்திலுள்ள பாதரசத்திற் குப்புறக்கவிழ்த்து விரலையெடுத்து விடுங்கள். அவ்வொருகஜம் அல்லது 36-அங்குல உயரமுள்ள பாதரச மவ்வளவையும் வெளியிலுள்ள வாயு தாங்கமுடியவில்லை யென்பதைக் காண்பீர்கள். ஏனெனிற் குழாயிலிருந்த பாதரசத்திற் கொஞ்சம் கிண்ணத்தில் விழுந்துவிட ஏறக்குறைய 30-அங்குல வுயரமளவே ரசம் குழாயில் நிற்கும்; மற்றைய ஆறங்குல நீளமுள்ள இடம் வாயு சிறிது மில்லாத சூனியமேயாகும். இதனால் 30-அங்குல வுயரமுள்ள ரசத்தி னழுத்தல்வலியளவே வாயுவின் அழுத்தல் வலியுமென்பது கரதலாமலகம். ஒரு சதுரங்குல விஸ்தீரணத்திற்கு 30-அங்குல வுயரமுள்ள ரசத்தின் அழுத்தல்வலி ஏறக்குறைய ஐந்து வீசை எடை யளவென்று கணிக்கப்பட்டிருக்கிறது. அதனால் வாயுவின் அழுத்தல்வலியும் ஒரு சதுரங்குல விஸ்தீரணத்திற்கு ஏறக்குறைய ஐந்து வீசையெடை யளவென்பது வெளிப்படை. வாயுவின் அழுத்தல்வலி 30-அங்குல வுயரமுள்ள பாதரசத்தின் அழுத்தல்வலிக்குச் சரியானதென்றும் பாதரசம் நீரினும் 13½-பங்கு கனமுள்ளதாதலின், அவ்வாயுவின் அழுத்தல்வலி 30 × 13½-அங்குலம் அல்லது கிட்டத்தட்ட 34-அடி உயரமுள்ள நீரின் அழுத்தல் வலியோடொக்கும்.

துக்களையும் அபஹரித்தான். அதற்காக அவள் 'ஹைகோர்ட்'டில் அப்பீல் செய்தாள் : அங்கும் அச்கைப்பெண்ணுக்கு விரோதமாய்த் தீர்ப்பாயிற்று. தீர்ப்பான பிறகு 'டிக்கிரீதார'னுன பங்காளி வீடு முதலிய எல்லாவற்றை யும் தன் சுவாதீனஞ் செய்துகொண்டு தாயையும் பெண்ணையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டான். ஆஸ்தி முழுவதும் சுமார் பத்துலக்ஷம் ரூபாய்க ளிருக்கும். டிக்கிரீதாரன் அவையெல்லாவற்றையும் தன் வசப்படுத்திக் கொண்டான். கையிலிருந்த பொருளைக் 'கோர்ட்டுச்' செலவு முதலியவற்றிற் குச் செலவழித்துவிட்டாள். கையில் ஒருகாசும் இல்லை. இராதாராணியின் தாய்தான் அணிந்திருந்த இரண்டொரு நகைகளை விற்று 'ப்ரிவிகௌன்ஸி' லுக்கு 'அப்பீல்' செய்தாள். கையிலிருந்த தெல்லாம் செலவழிந்து கூழுக்கு வழியில்லாமற் போயிற்று. தலைவனில்லாதவள்; மற்றென்செய்வாள்? சிறிது தூரத்திலேயே ஒரு சிறியகுடிசை போட்டுக்கொண்டு சரீரக் கஷ்டப்பட்டுக் கிடைத்ததை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்து வந்தாள். இராதரா ணிக்குக் கலியாணம் செய்யமுடியவில்லை. ஏழைக்குடும்பத்திற் பிறந்த பெண் யாருக்கு வேண்டும்? யார் வாங்கிக் கொள்வார்கள்?

இந்தத் துரதிஷ்டத்துக்கேற்க, மேற்சொல்லிய உற்சவத்திற்குச் சில நாட்களுக்குமுன் இராதாராணியின் தாயாருக்கு மிகவும் பலஹீனம் உண்டா யிற்று. அதனுற் கூலிவேலை செய்து காலங்கழிப்பது கூட நின்றுபோயிற்று. இனி அன்னத்துக்கு மார்க்கமில்லை. தாயார் பிணியால் வருந்திக்கொண்டிரு ந்தமையால் அவர்களுக்கு உபவாஸமே கதியாயிற்று. இராதாராணியால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இரதோற்சவத்தினன்று தாயாருக்குச் சிறிது இறங்குமுகமாய்க்காணப்பட்டது. பத்தியத்திற்கேதாவது கொடுக்கவேண் டும். ஆனுற் பத்தியத்துக் கெங்கிருந்து கொண்டுவருவது? யார் கொடுப் பார்கள்?

இராதாராணி கண்ணீர் விட்டுக்கொண்டு அங்கங்கே தரையில் விழுந்தி ருந்த காட்டு மலர்களைப் பொறுக்கிக்கொண்டுவந்து ஒரு மாலைகட்டி இதைத் திருவிழாவில் விற்ருல் இரண்டு காசுகிடைக்கும், தாயார் பத்தியத்துக்கு ஏதாயினுங் கொண்டு வந்து கொடுக்கலாம் என்று தன் மனத்தில் யோசித் தாள்.

ஆனுல் திருவிழா நடக்கும் பொழுது நல்ல பகற்காலத்திற் பெருமழை பிடித்தது. மழையைப் பார்த்து உற்சவத்துக்கு வந்த ஜனங்களெல்லோரும் ஓடிப்போனுர்கள். பூமாலையை ஒருவரும் வாங்கிக்கொள்ளவில்லை. இராதா ராணி தனக்குள், நான் இப்பொழுதே போகக்கூடாது. மழை நின்ருல் திருவிழாக்கூட்டம் மறுபடியும் சேரும். அப்பொழுது யாராவது பூமா லையை வாங்கிக்கொள்வார்களென்று யோசித்தாள். ஆனுல் மழை நிற்க வில்லை. பழயபடி உற்சவமும் நடக்கவில்லை. மாலைப்பொழுதாயிற்று. இரவு

நெருங்கிற்று; நள்ளிருளாயிற்று. அப்பொழுது இராதாராணி தன்னையறியாமலே அழுதுகொண்டு வீட்டுப்பக்கம் திரும்பினாள்.

எங்கும் இருள் மயமாயிருந்தது. வழிமுழுவதும் சேறுயிருந்தமையாற் சருக்கிற்று. எதுவுங் கண்ணுக்குத் தெரியவில்லை. இந்த ஸ்திதியிற் கார்காலத்து மழை அடைமழையாய்ப் பிடித்துக்கொண்டு விடாது பெய்தது. தாயாரினுடைய உபவாசம் ஞாபகத்துக்கு வந்து, இராதாராணியின் கண்களில் மழைத்தாரைகளைவிட நீர் அதிகமாய்ப் பெருக ஆரம்பித்தது. அவள் அழுதுகொண்டு அங்கே சருக்கிவிழுந்து எழுந்து வந்துகொண் டிருந்தாள். அவளது மிகவுங் கரிய கூந்தல்வரிசை இருபாரிசங்களிலுந் தொங்கின வண்ணமாய் மழையில்நனைந்து தண்ணீர் சொட்டிக்கொண் டிருந்தது. ஆனால் இராதாராணி அந்த இரண்டுகாசுபெறுமான பூமாலையைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண் டிருந்தாளேயன்றி அப்புறம் எறிந்துவிடவில்லை.

இவ்வித அந்தகாரத்தில் சற்செயலாய் ஒரானொருவன்வந்து இராதாராணியின்மீது விழுந்தான். ராதாராணி இதுவரைக்கும் 'ஹோ' என்று அழுததுபோலவே அப்பொழுதும் அழுதாள்.

மேலேவிழுந்த ஆள் "பாரம்மா, ஏன் அழுகிறாய் ?" என்று வினவ,

அஃது ஆண்குரலாயிருந்தது. குரலோசையைக்கேட்டு இராதாராணி ரோதனஞ்செய்வதை நிறுத்தினாள். அவன் இராதாராணிக்கு அறிமுகமானவனல்லன். சிறுமியாயிருந்தாலும் அந்த வயதிற் கூட அவனது வார்த்தைகளினால் அவன் மிகவுந் தயாளுவென்று தெரிந்து கொண்டாள். இராதாராணி அழுகையை யெல்லாம் அடக்கிக்கொண்டு "நான் ஏழைகள்வீட்டுப்பெண். எனக் கொருவரும் திக்கில்லை. தாயார் மாத்திரம் மீந்திருக்கிறாள்" என்றாள்.

புருஷன் :—நீ எங்கே போயிருந்தாய் ?

ராதா :—நான் இரதோற்சவத்தைப் பார்ப்பதற்குப் போயிருந்தேன். வீட்டுக்குத்திரும்பிப் போகின்றேன். இந்த மழையிலும் இருட்டிலும் வழியே தெரியவில்லை.

புருஷன் :—உன் வீடு எங்கே ?

ராதா :—ஸ்ரீராமபுரத்தில்.

புருஷன் :—என்னுடன் கூடவா. நான் அங்கேபோகின்றேன். நட; உன் வீடு எங்கே ? சொல்லு. உன்னை அகத்தில் விட்டுவிட்டுப் போகின்றேன். மிகவும் சருக்குகின்றது. என் கையைப்பிடித்துக் கொண்டுவா. இல்லாவிட்டால் விழுவாய்.

என்று சொன்னான். இப்படிசொல்லி அந்தப்புருஷன் இராதாராணியையழைத்துக்கொண்டுபோனான். இருட்டாயிருந்தபடியால் இராதாராணியின்

வயது அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அவளது குரலோசையினால் அவள் வளர்ந்த பெண் என்பது தெரியவந்தது. அவள் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். அவள் கையின் ஸ்பரிசத்தினாலும் அவள் பெரிய பெண்ணென் றறிந்து 'உனக்கு எத்தனை வயது?' என்று கேட்டான்.

**இராதா** :—பதினொரு வயது.

**புருஷன்** :—உன் பெயர் என்ன ?

**இராதா** :—இராதாராணி.

**புருஷன்** :—ஓ ராதராணீ, நீயோ சிறுமி ; தனிமையாய் உற்சவத்துக்குப் போனது என்ன ?

இப்படியே பேசிக்கொண்டு நல்ல வார்த்தைகளினாற் கேட்டு அதன் மூலமாய்க் காட்டுப்பூமாலை சமாசாரத்தை வெளிக்குக் கொண்டுவந்தான். பிறகு தான் தாயாருக்குப் பத்தியத்துக்காக அம்மாலையை விற்கும்பொருட்டு உற்சவத்துக்குச் சென்று மழையினால் திருவிழாவில் மாலையை விற்பதற்குக் கூடாமல் அதனைக் கொண்டுவந்து விட்ட செய்தி அவ்வளவையும் சொன்னாள். இதைக் கேட்டு அந்தப் புருஷன், நான் எங்கள் சுவாமிக்கு ஓர் மாலையினிமித்தம் போய்ப் பார்த்தேன். திருவிழா நடுவில் நின்றுவிட்டது. எனக்குப் புஷ்பம் கிடைக்கவில்லை. மாலையை விற்குமிடத்தில் நான் விலை கொடுத்து வாங்கிக்கொள்ளுகின்றேன் என்றான்.

இராதாராணிக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. ஆனால் இவ்வளவு கஷ்டப்பட்டு என்னை இருட்டிற் கைப்பிடித்து அகத்துக் கழைத்துக்கொண்டு போகிறவனிடம் கிரயம் வாங்கிக் கொள்ளலாமா என்று மனதில் யோசித்து, உடனே அப்படிக் கிரயத்தை நான் வாங்கிக்கொள்ளாமற் பேவேனாயின் தாயாருக்கு அன்னமில்லாமற் போகின்றது. ஆகையினால் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டு மாலையைத் தன்னுடன் வரும் புருஷன் கையிற் கொடுத்தாள். அவன் 'இதன்கிரயம் 4 காசுவாங்கிக்கொள்,' என்று விலை கொடுத்தான். இராதாராணிவாங்கிக்கொண்டு, 'இதென்ன காசு ; பிடித்துப்பார்த்தால் பெரிது பெரிதாய்க் காணப்படுகின்றதே,' என்றாள்.

'அது பெரியகாசு; இரண்டே கொடுத்திருக்கிறேன். அதிகம் கொடுக்கவில்லை; பார்,' என்றான் அந்தப்புருஷன்.

**இராதா**:—ஈதென்ன ? இவ்விருட்டிற் கூடப்பிரகாசிக்கிறமாதிரி தென்படுகின்றது. மறந்து ஏதாவது ரூபாய்களைக் கொடுத்திருக்கக் கூடுமென்று தோன்றுகின்றது.

**புருஷன்**:—இல்லை. புதியகாசு; அஃது ஒளிவீசுவதுண்டு.

**இராதாராணி**:—நல்லது. வீட்டுக்குப் போய் விளக்கையேற்றிப் பார்க்கின்றேன். காசாயில்லாவிட்டால் உங்களிடம் கொடுக்கிறேன். அதுவரையில் தாங்கள் அவ்விடம் நின்று கொண்டிருக்கவேண்டும்.

சிறிது நேரத்திற் கெல்லாம் இராதாராணி தாயாரிருக்கும்வீட்டண்டை அவர்களிருவரும் வந்தார்கள். அங்கே இராதாராணி 'நீங்கள் உள்ளேவந்து நிற்கவேண்டும். நான்விளக்கேற்றி ரூபாயோ அல்லது காசோ என்று பார்க்கிறேன்' என்றாள். கூடவந்த புருஷன் 'நான் வெளியே நிற்கின்றேன். நீ முதலில், கட்டிக்கொண்டிருக்கும் வஸ்திரத்தை எடுத்துவிட்டு வேறு புடவையைக் கட்டிக்கொண்டு பிறகு விளக்கை ஏற்று' என்றான்.

**இராதா** :—எனக்கு வேறே சிற்றாடை இல்லை. இருந்த ஒன்றைத் தோய்ப்பதற்கு வண்ணாத்தியினிடம் போட்டிருக்கின்றேன். நான் எப்பொழுதும் ஈரத்துணி யுடனேயே இருக்கிறேன். எனக்கு நோய்வருவதில்லை. ஒரு பக்கம் தலைப்பைப் பிழிந்து கட்டிக்கொள்ளுகிறேன். நீங்கள் உள்ளேவந்திருங்கள். விளக்கேற்றுகிறேன்.'

**புருஷன்** :—'நல்லது'.

வீட்டில் எண்ணெய் இல்லாமையால், போரிலிருந்து ஒரு பிடி வைக்கோல் பிடுங்கி சகிமுகிக்கல்லையடித்து நெருப்புண்டாக்கவேண்டியதாயிற்று. அதற்காகச்சிறிது நேரமாயிற்று. வெளிச்சத்தில் இராதாராணி பார்க்கவே அது காசாயில்லாமல் ரூபாயாயிருந்தது. இராதாராணி வெளியேவந்து பார்த்தாள். ரூபா கொடுத்தவனைக் காணோம். அவன் புறப்பட்டுப் போய்விட்டான்.

**இராதாராணி** :—சோர்ந்த முகத்துடன் இந்தச் சாமாசாரத்தை யெல்லாம் தாயாருக்குச்சொல்லி தாயார் முகத்தைப்பார்த்துக் கொண்டு பச்சாத்தாபத்துடன் 'அம்மா, இப்பொழுது என்ன செய்யலாம்? என்று கேட்டாள்.

**தாயார்** :—'என்ன செய்யலாமம்மா?'

'அவன் என்னவோ தெரியாமற் கொடுத்தவன் அல்லன். அவன் கொடையாளி. நம் துக்கத்தைக்கேட்டுத் தானஞ்செய்தான். நாமோ பிச்சைக்காரர்களானோம். தானம் பெற்று வைத்தியம் பண்ணிக்கொள்வோம்' என்றாள்.

அவர்களிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், யாரோ வாசற்படிக்கப்புறத்திலிருந்து சங்கிலியைத் தொட்டு ஆட்டினார்கள். ராதாராணி கதவைத்திறந்தாள். அவனே மறுபடியும் வந்தானென்று எண்ணினாள். ஐயோ, கிரகசாரமே! அவனல்லன். அவன் ஏன்வருவான்? இந்தக் கருடப்பார்வை ஜவளிக் கடைக்காரன்.

இராதாராணி வசிக்கும் கடைத்தெருவுக்கும் வெகுதூரமில்லை. அந்தக் குடிசைக்கு அருகிலேயே ஜவுளிவர்த்தகம் பத்மலோசனன்கடை. கருடப்பார்வை பத்மலோசனனே ஒரு ஜதை சாந்திபுரம் சேலைகளைக்கொண்டு

வந்துசங்கிலியைப் பிடித்து ஆட்டினவன். கதவைத்திறக்கவே அந்தச் சேலே களை 'இராதாராணி, நீ வாங்கிக்கொள்' என்று சொல்லிக் கொடுத்தான்.

**இராதாராணி:**—'இதென்ன? எனக்குச் சேலை கொடுத்ததுயார், என்று வினவினுள். பத்மலோசனன் இராதாராணி சொன்னதைக் கேட்டுச் சிறிது வியப்படைந்து, 'அவர் யாரோ என்னவோ தெரியாது. இப்பொழுது தான் ஒரு பெரிய மனிதர் எனக்கு ரொக்கம் கொடுத்து இந்தச் சேலை களை இராதாராணிக்குக் கொடுத்து விட்டுவா'வென்று சொன்னுர்.

**இராதாராணி:**—அவனுகவே இருப்பான். வேறேயார்? என்ன பத்மலோசனு, அவனேவந்து இந்தச் சேலைகளைப் பேரம் செய்தானு? என்று கேட்டாள்.

இராதாராணியின் தகப்பனுர் காலமுதல் பத்மலோசனன் நன்ருய்த் தெரிந்தவனுயிருந்தான். அவர் ஜீவித்திருந்த காலத்தில் 4 ரூபாய் விலையுள்ள சேலைக்குப் பிரமாணம் செய்து 8½ ரூபா அசல் கிரயமென்று அதன்மேல் ரூபாய்க்கு இரண்டணு லாபமென்றும் சொல்லி வாங்கிக்கொண்டிருந் தான்.

**இராதா:**—பத்மலோசனு, அந்தப் பெரிய மனிதரை நீயறிவாயா?

**பத்மலோசனன்:**— உங்களுக்குத் தெரியாதா என்ன?'

**இராதா:**—தெரியாது.

**பத்மலோசனன்:**—உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவனென்றெண்ணினேன். எனக்கும் தெரியாது.

எப்படியானுலென்ன? பத்மலோசனன் 'நாலு ரூபாய்ச் சேலைக்கு எட்டரை ரூபாயும் லாபம் வேறேயும் வாங்கிக் கொண்டேன். இனி அதிகப் பேச்சினுற் பயன் இல்லை' என்று யோசித்து களித்த மனத்துடன் தன் கடைக்குப் போனுன்.

பின்பு, இராதாராணி 'மாலைக்கு அவன் கொடுத்த ரூபாயைத் தாயாருடைய பத்தியத்திற்குப் போஜனபதார்த்தங்கள் வாங்கிக்கொண்டு வருவதற்குக் கடைத்தெருவுக்குப்போனுள். கடைக்குச் சென்று வேண்டிய பதார்த்தங்களையும் எண்ணெயும் வாங்கிக்கொண்டும் வந்து விளக்கையேற்றினுள். தாயாருக்குச்சமையல் செய்தாள். பிறகு தாயாருக்குப் பத்தியம் கொடுக்கவேண்டுமென்று யோசித்து அறையைப்பெருக்கினுள். பெருக்கும் பொழுது ஒருகாகிதம் அகப்பட்டது. அதைத்தாயாருக்குக் காட்டி, இதென்னவென்று கேட்டாள்.

தாயார் பார்த்து, இது 'நோட்டு' என்று சொன்னுள். இராதாராணி 'அவனே போட்டுவிட்டுப் போனுனே என்னவோ?' என்ருள்.

**தாயார்** :—உனக்குக் கொடுத்து விட்டுப்போனான். அதில்பார். "இராதா ராணிக்கு இந்த நோட்டு" என்று எழுதியிருக்கிறான் என்றாள்.

**இராதா** :—அப்படிப்பட்டவன் அவன் யாரம்மா?

**தாயார்** :—அவன் பெயர்கூட நோட்டிலே எழுதியிருக்கிறது. ஏனென்றால் இதை எவராவது திருட்டுநோட்டென்று சொல்வார்களென்று தன்பேர் எழுதியிருக்கிறான். அவன் பெயர் ருக்மிணீகுமாரராயன்.

மறுநாள் தாயார் மகள் இருவர்களும் ருக்மிணீ குமாரராயனைத்தேடினார்கள். ஸ்ரீராம புரத்திலும் அவன் சமாசாரமே கிடைக்கவில்லை. நோட்டை அவர்கள் மாற்றவில்லை. அப்படியே வைத்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் ஏழைகளாயிருக்கினும் பேராசையுள்ளவர்களாயிருக்கவில்லை.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

# MORAL VERSES.

## நீதிசாத்திரம்.

### நூன்முகம்.

அளப்பரு நீதி நூல்கள் நந்தமிழ்நா டியற்றிய தவமென விளங்கா நிற்கின்றன. அவை செந்தமிழ்க் கடலைத் தம்மறிவாம்புணைகொடு கடந்த செந்நாப்புலவோரா னருளப்பெற்று, எந்நாட்டவரும் தம் முடிசூட்டிக் கொள்ளுமாறு பொலிவெய்தி நின்றன. அஃதங்ஙனமாக, வடநூல் வல்லார் தந்நூலி னுங்காங்கு கண்டன சில்ல திரட்டி 'நீதிசாத்திர'ப் பெயராற் காட்டினர். அக்கருத்துக்களு நந்தமிழ்வல்லோர்பாற்பட்டுத் தத்தநூல்களுட் பல் வேறிடங்களிற் கூறியிருப்பினும் யாம் அவையிற்றை யொருங்கே மொழிபெயர்ப்பா னுர்வமுற்று ஓராற்றால் **நீதிசாத்திரப்** பெயரானே யியற்றுவனுயினேம்.

தமிழ்வல்லோர் இவையிற்றை இலக்கண வழூஉக்களுக்குக் காட்டாவெனினுங் கைக்கொண்டு எம்மை மருட்டாவழித் தெருட்டுவாராக.

மண்முகத் தெனது மயறெறப் போந்த
சண்முக னருளுளங் தழீஇ
யுண்மைநூ லறைகுவ னுலகி னோர்க்கே.

### காப்பு.

ஆதிநூற் கூற்றுக் கமரைங் கரற்றொழுது
நீதிநூல் கூற நினைந்து.

காப்புக்கு முன்னுங் கடவுளெனக் கைக்கரியன்
றோப்பு முறைக்குமுன் னுற்றவருண் — மாப்பாவை
யண்டுகிறப் பெம்மா னமர்நீதி சாத்திரக்கிங்
கொண்டுணை யாகி யுறும்.

## அவையடக்கம்.

வேதச் சினையா விரிசாத் திரமலரா
போதப் புலவோர் புகழளியாச் — சீதந்
தருசோலை யாமவையைச் சார்தும் பிழையா
வருமூல வெப்பகற்று மாறு.

## நூல்.

வாய்மையே மெய்த்தாய் வயங்கறிவே மேதாதை
தூய்மைசெய் நல்லறமே சோதரமா — மேய்ந்ததயை
நட்பாகுஞ் சாந்தமனை நற்புத் திரன்பொறையா
முட்கொள் ளிவையே யுறவு. (௧)

மானம் படவரின் வாழா துயிர்நீத்திங்
கீனம் படாதுயர்வை யெய்துகவே — மானமது
பட்டால் வசைமதியம் பானுவுள ளான்றுமுயிர்
விட்டாலுஞ் சீர்த்தி விடா. (௨)

அந்தணருக் காமடிசி லாவினுக்கிங் கெய்தும்புல்
சிந்தைவலி மீக்க திறல்வீரற் — குந்தமரி
லொன்னார் தமைச்செறுத லுற்றகொழு னற்பெறுதன்
மின்னாருக் கெய்தும் விருப்பு. (௩)

பிறர்தாரந் தன்னையே பெற்றதா யாகப்
பிறர்பொருளை யோடாகப் பேணி — பொறைமேவும்
வைப்பிலுயிர் யாவுந்தன் மன்னுயிரா வுற்றோனே
யொப்பிலுயர் ஞானி யுணர். (௪)

யாக்கை யிளமை யநித்தியமே யஃதுறூஉம்
வாழ்க்கை யொடுவளனு மாறுமே — நீக்கமறுஞ்
சாவோ தலைநிற்குந் தன்மைத் துயிர்வாழ்வீர்
ஆவோ புரிவீ ரறம். (௫)

தந்தை யொடுதன் றனித்துணைவன் றுனீன்ற
மைந்த னெனினும் வனப்பினரேற் — பைந்தொடியார்
சிந்தையன் னார்வயமாச் செல்லுமாற் காளையீர்
சிந்தை யகன்மி னினைந்து. (௬)

அத்தி மலரு மடர்வெண் காிக்கொடியும்
வித்தகநன் னீர்மேவு மீனடியுஞ் – சுத்தமுற
வித்தறையிற் காண்கினுங் காணே மெழினல்லார்
சித்தமுறு மெண்ணத் திடன். (எ)

பஞ்சத்தி லன்னம் பகர்வோன் வளமாீஇ
விஞ்சு தனதான மீந்திடுவோ – னெஞ்சம்
வலியா னமாில் வறுமையிற் சீலம்
பொலிவான் புகழே புகழ். (அ)

தேட்டை யடியார்க்குச் சோிளமை யில்லாட்கு
வீட்டை யடைநெறிக்கு மேவுயிரைப் – பாட்டளியார்
பூத்தலர்ந்த கொம்பைப் பொருமின்னே மேதினியி
னீத்தலே நல்ல நெறி. (கூ)

உடலிற் றலைதலையா மோங்குறுப்பிற் கண்ணும்
விடலில் சுவையிலுவர் மேவுங் – கடலிற்
பொிதாகும் கண்ணுப் பெருகுநன் னீரே
யாிதாமோ ராற்றுக் கதி. (க0)

குடம்பலமண் ணென்றுங் கோப்பலபா லொன்று
முடன்மே லணிபல வொன்று – மிடும்பொன்
னமையும்பன் னூல்க ளறையு மிறையொன்றே
சமயம் பலவினுக்குந் தான். (கக)

பொருணசையோர்க் குற்றுர் போத குருவில்லை
வருகாமிக் கில்வெட்க மானங் – தருகல்வி
தோய்வோர்க் கிலைசுகமுந் துஞ்சல் பசித்தோர்க்
கேய்சுவையும் பக்குவமு மில். (கஉ)

வள்ளல்வறி யோனு வழங்கான் வளவனு
வெள்ளும் பதகனுண் டேய்சதமாக் – கொள்கலியி
னல்லோனுட் சின்னாளா நாயகனே ரூழியனுப்
புல்லோ னரசாகிப் போம். (கங)

காதன் மனையாளைக் கையகற னல்லோர்நெஞ்
சேதம் படநிற்ற லெய்துகடன் – கோதார்
குலத்தானைக் காண்டல் கொடுவறுமை யிற்சார்
நலத்தானு மாமே நமன். (கச)

கா. நமச்சிவாய முதலியார்.

# TIT BITS.

## விநோதக் கூற்றுக்கள்.

### ஒரு பத்திராதிபரின் தந்திரம்.

ஓரூரிலே ஒருவர் புதிதாய்ப் பத்திராதிபராயினார். அந்தஊரிலே சூதா[illegible] வோர் அநேகர் ஜனங்களுக்குக் கஷ்டத்தை கொடுத்துக்கொண்டுவந்தனர். “இச்சூதாடுவோரைப்பற்றிக் கண்டித்து எழுதாவிட்டால் உம்முடைய பத்திரிகையை நாங்கள் ஆதரிக்கமாட்டோம்” என்று ஜனங்கள் சொல்லிவிட்டார்கள். அவரும் அப்படியே அடுத்த சஞ்சிகையிற் சூதாடுவோரைப்பற்றி நிந்தித்து எழுதி வெளியிட்டுத் தாம் ஒரு வேலைக்காரனைப்போற் கையிற் கத்தரிக்கோலுடன் ஒருபக்கமாக உட்கார்ந்துகொண்டார். சிறிதுநேரம் சென்றதும் வலிய உடம்பினையுடைய ஒருவன் கையில் ஒரு பருத்ததடியை எடுத்துக்கொண்டுவந்து இவரைநோக்கிப் “பத்திராதிபர் உள்ளேயிருக்கிறாரா?” என்றுகேட்டான். “இப்பொழுதுதான் வெளியிற் சென்றார். இதோ வந்துவிடுவார். பத்திரிகையை வாசித்துக்கொண்டிருங்கள்” என்று சொல்ல அவனும் அப்படியே ஒரு நாற்காலியிற் கால்மேற்காலைப் போட்டுக்கொண்டும் தனதுதடியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டும் மிகவும் கோபத்துடன் ஒரு பத்திரிகையெடுத்து வாசித்துக்கொண்டிருந்தான்.

பத்திராதிபரும் படியிறங்கிக் கீழேசென்றார். அப்பொழுது தனக்கெதிரில் ஒருநீண்டதடியைக் கையிலெடுத்துக்கொண்டுவந்த மற்றொருவன் இவரைநோக்கிப் “பத்திராதிபர் உள்ளேயிருக்கிறாரா?” என்று மிகவும் கோபத்துடன்கேட்டான். “ஆகா, இருக்கிறார். மாடத்தின்மேல் ஒரு பிரசுரத்தைப் படித்துக்கொண்டிருக்கிறார். மேலேயேறிச் செல்லுங்கள்” என்றார். இப்படி உரைத்ததும் இவன் தடியுடன் மேலேசென்று நாற்காலியிலிருந்தவனை ஓர் அடிபலமாயடித்தான். அவனும் அந்தஅடியைத் திருப்பினான். சண்டையும் வலுத்தது. இரண்டு பேர்களும்கட்டி மல்லுக்குநின்று படிகளில் உருண்டுருண்டு கடைசியிற் படிகளினடியில் நன்றாய்த் தங்களுக்குத் திருப்தியாய் மாறிமாறி அடித்துக் கொண்டார்கள். பத்திராதிபரின் தந்திரம் எத்தகையது!

### புத்திமதிகேட்டல்.

ஒருநாள் ஒருவன் ஒரு வக்கீலிடம் வந்து ஓர் அரைரூபாயைக் காட்டி ‘இது செல்லுமா?’ என்று கேட்டான். அவ்வக்கீலும் அந்த நாணயத்தைக் கையில் வாங்கிப்பார்த்து ‘நன்றாய்ச் செல்லும்’ என்று சொல்லி அதைத் தன் பையிற் போட்டுக்கொண்டு, என்னிடத்தில் யோசனை கேட்க வருகிறவர்கள் எனக்குக் கட்டணம் ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும். ஆகையால் நீர் வீட்டுக்குச் சென்றதும் பாக்கி அரை ரூபாயையும் சிறிது சீக்கிர மாகவே எனக்கு அனுப்பிவிடும்” என்றார்.

க. தே. வேங்கட வரதாசாரியன்.

# CORRESPONDENCE.

## கடிதம்.

### ஸ்ரீ இராமாநுஜசரிதவாராய்ச்சிவிடையும் அது போலியாமாறும்.

இஃது இராமாநுஜ சரித நூலியற்றியவரால் எம்மிடங் கொடுக்கப்பட்டது. இதனடியிற் கையெழுத்து வைத்திருக்கும் **தி. நரசிம்மாசாரியர்** என்பவர் ஞானபோதினிக்கு யாதோரியைபு மில்லாதவரா யிருத்தலேயன்றி இதில் எழுதின விஷயங்சள் போலியாயிருக்கவும், அவரது ஆவலை மறுமை கருதியும் பிறர்க்கு உண்மை விளங்குதல் நோக்கியும் **உள்ளபடி** அவரது விடையைப் பிரசுரஞ் செய்து அதுபோலியாமாறும் அடியிற் காட்டலாயிற்று. ஆங்காங்கே இருதலைப் பகரத்திலுள்ளன நமது மறுப்புக்களாம்.—[**பத்திராதிபர்.**]

ஞானபோதினியைப் படிக்கும் அன்பர்களுக்கு ஒரு விண்ணப்பம் :

1. ‘நூலிலுள்ள குற்றங்குறைகளுள் யாம் கண்டவற்றிற் சிலவற்றை நடுவு நிலைமை குன்றாது இங்கு எடுத்துக் காட்டுவதும் எமக்கு ஒரு கடப்பாடாம்’ என்ற நம் நண்பர், மற்றை நூல்களிற் சிறிதுங் குறை காணாமையே தமது நடுவு நிலைமையோ ?

[இது கேட்டற்கு இவர்யார் ? குறிப்பெழுத எடுத்துக்கொண்ட மூன்று நூல்களுள் முந்தினது அவ்வளவு விசேட ஆராய்ச்சிக்கு இடமன்றென விட்டிருத்தலாகாதா ? அல்லதூஉம் அதிலும் ஒரு பெருங்குறை காட்டியது இவர் கண்ணில் ஏன் படவில்லை ? பிந்தின நூலிற் பிழையில்லையென்பது எமது துணிவாகக் கூடாதா? ஒரு நூலிற் குற்றங்கூறியவிடத்து ‘ஊரிலுள்ள புத்தகங்களின்மேலெல்லாம் ஏன் அப்படிக் கூறவில்லை?’ என்பது ஏற்றவிடையோ ?]

2. (ஞானபோதினி: பக்கம் 75 - இல்) (பகவான்) ‘நடுக்கடலில் திசைதப்பியலைபவனுக்குக் காருணிகனான வொருவன் தோணியை யுதவினாற்போல......மீளவுங்கருணை கொண்டு......இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து’—இவ்வாக்கியத்தில் ‘உபமானத்திற்கு ஏற்ற உபமேயம் காணப்படவில்லை’ என்கின்றார். நண்பர், ‘உதவினாற் போலக்கருணைகொண்டு, அவதாரங்களைச் செய்து’ என முடிபுசெய்து உபமானோபமேயப் பொருத்தத்தை அறிவாராக.

[ஒரு பெரிய சொற்றொடரிற் சில சொற்களை யிடையிடையே விட்டு எழுதிக்காட்டின மாத்திரத்தால் உபமானத்திற்கு உபமேயம் வந்திடுமோ ? தோணியை யுதவுதற்கு உபமேயம் பொருந்தவில்லையே. ‘அவதாரங்களைச் செய்து’ என்பதற்கு வேறுவமைதனியே கூறப்பட்டிருக்கிறதன்றோ ? அதனை மறைத்துக்காட்டுதல் பொய்ம்மையின்பாற்படாதோ ? இவர் கூறியபடி முதனூல்களில் இல்லையே. அவ்வாக்கியங்களை விரிவஞ்சியிங்கு எழுதாது விட்டனம். வேண்டுழி யெடுத்துக்காட்டுவாம்.]

இங்ஙனமே, (ஞானபோதினி 76-ஆம் பக்கத்தில்), தந்தையின் பொருளைத் தனயன் பெறுவது போலச் சடகோபனருளிய திருவாய்மொழியின் “ஒருநாயகம்” என்ற திருப்பதிகத்தை அத்திருநாரணனுக்குச் **சமர்த்து**

என்ற வாக்கியத்தின்கண்ணும் 'உபமான உபமேயங்கள் இயையவில்லை' என்கின்றார். நம் நண்பர், தந்தையின் பொருளைத் தனயன் பெறுவதுபோல் இராமாநுசன் திருவாய்மொழியில் தமக்குள்ள உரிமையினாற் சமர்ப்பித்தார்' என்னும் பொருளைநோக்கிப் பொருத்தங் காணகில்லாது குறைகூறுகின்றார்.

[இங்ஙனங் கொண்டாலும் உபமானவுபமேயங்கட்கு இயைபில்லையே. பெறுதற்குச் சமர்ப்பித்தல் எங்ஙனம் ஒப்பாதற்கு ஏற்கும்? 'பிதிருதனத்தைப் புத்திரன் விநியோகங் கொள்ளுமாபோல......ஒரு நாயகத் திருவாய்மொழியைத் திருநாரணற்குச் சமர்ப்பித்தருளினார்' என்று முதனூல்களிலுள்ளதை நன்கு ஆய்வாராக. விநியோகங்கொள்ளுதல் என்பதற்குப் பொருள் 'பெறுதல்' அன்று என்பதை நல்லாசிரியரை யடுத்துக் கேட்டுணர்க.]

3. (ஞானபோதினி: பக்கம் 75-இல்), 'பொய்கை பூதம் பேய் மழிசையர் கோன் முதலிய ஆழ்வார்கள்'—என்னும் இவ்வாக்கியத்தும் 'ஆழ்வார்கள்' என்றது காரண விடுகுறியளவாய்நின்று இளையாழ்வார்முதலிய ஆசாரியர்களையும் தழுவவேண்டுமென்பது ஆசிரியரது கொள்கையாதலின் 'முதலிய' என்கின்றார் எனவறிக.

[காரணவிடுகுறியின் இலக்கணத்தையுணர்ந்திருந்தால் இவர் இவ்வாறு எழுத இடமில்லை. காரண மாத்திரத்தாற் பலபொருள்களைக் குறித்தற்குரிய சொல் அங்ஙனமன்றி யிடுகுறியளவாய் நின்று ஒன்றற்கே யுரிமை பூண்டிருத்தலன்றோ அதனிலக்கணம். அதனால் ஆழ்வார்களென்றது பொய்கையார் முதலிய பன்னிருவரையே குறிக்குமேயன்றிப் பிறரை யுணர்த்த மாட்டாதே. இளையாழ்வார் முதலிய ஆசாரியர்களைத் தனியே ஆழ்வார்களென்றல் வைணவ சம்பிரதாய மன்றென்பதை யறிவாராக. சொல்லளவினாற் கொள்வோமெனின் எதிலாழ்பவரையுங் கொள்ளவேண்டியதாய் அதிவ்யாப்தி யென்னுங் குற்றத்திற்கிடமாம். அல்லதூஉம் இளையாழ்வார் அவதரித்தற்கிடமான நாட்டின் சிறப்பைக் கூறுமிடத்து அவரும் அவர்க்குப் பின்னிட்டோரும் அவதரித்ததை யெடுத்துரைத்தல் தகுதியன்றே.]

4. (ஞானபோதினி பக்கம் 76-இல்) 'இப்படியிருந்தால் விளங்கும், அப்படியிருந்தால் விளங்கும்' எனக் கூறுகின்றார். இவர்க்கு வேண்டிய விளக்கமே யாவர்க்கும் வேண்டியதாமோ? அஃது ஆசிரியர்க்கன்றோ தெரியும்? கண்ணில் நோய்கொண்ட வொருவனுக்குச் சூரியன் நீலநிறமுடையவனாகக்காணப்படின் அது எவருடைய குற்றமாகும்? ஒருவர் தமக்குவிளங்காதவிடயத்தை ஆசிரியரிடம் கேட்டறியல் வேண்டுமேயன்றி நூலாசிரியர்களிடங் குற்றங் கூறலாமோ?

[இஃது அவ்வளவும் வெறிக்கூற்றும் அசங்கதமுமாம். முதனூல்களில் தெளிவாக எழுதப்பட்டுள்ள விஷயங்களை முறைபிறழ ஒழுங்கின்றி யெழுதிக் குழப்பத்துக்கு இடஞ்செய்தல் ஏலாதென்பது வெளிப்படை.]

5. ஷை பக்கத்தில், 'இதனாலன்றோ ஆளவந்தாரது குறைகள்யாவும் நீங்கின'—இதில், விடயம் இன்னதென வறியாமல் நமது நண்பர் குற்றங்கூறுகின்றார். அந்தோ! ஆளவந்தாரது விரல்கள் நிமிராமை காரணமாகத் தெரிந்த 3-குறைகள் மிகப்பெரியன. சாதாரணமான மற்றைக்குறைகள் பல. அவ்வாளவந்தாரது திருவுள்ளப்படி பல்வகைச் சிறப்புச்செய்திகள்

இராமாநுசன்முகமாய் நிகழ்ந்தமையின் அவற்றைவெளியிட இந்நூலாசிரியர் அங்ஙனம் பலபடிவியந்து அனுவாதமுகத்தாற் கூறினர் என்பதை நம் நண்பர் தெளிவாராக.

[இது மிகவும் நேரிது! ஆளவந்தாரைக் குறைகட்கு ஒரு கொள்கலமாக்குகின்றார். அங்ஙன மிருந்தால் மற்ற விரல்களும் மடங்கியிருக்குமல்லவோ? மூன்றே மடங்கியது என்னை? "மூன்று திருவிரல்கள் மடங்கியிருக்க...... இளையாழ்வாரும் 'ஏதாகிலுந் திருவுள்ளத்திலே கருத்துக்கள் உண்டாகக் கடவன' என்று விசாரித்தருளி 'முன்பு வியாக்கியானசமயத்திலே அபிமத ஸல்லாபங்களைக் கேட்டவர்கள் உண்டோ?' என்ன, ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாருங் கூட 'வேறொன்று மறியோம்' என்ன இளையாழ்வாரும் அவரகவாயி லெண்ணத்தி னேற்றமறிந்து......ஒருப்பட்டவாறே மூன்று விரல்களும் விட்டு......கைநிமிர" என்றன்றோ முதனூல்களெல்லாம் முழங்குகின்றன. அளவிறந்த குறைகள்நிறைந்திருந்தால் 'வேறொன்று மறியோம்' என்பார்களோ? அவர்கள் அறியாத குறைகளை யிவர் அறிந்தார்போலும்! ஆசாரியர்க்கு இல்லாத குறைகளை யெல்லாங் கற்பிக்குந் திறன் வியக்கற்பாற்று. ஸ்ரீ ராமாநுஜ சரித நூலிலும், 'நமது ஆளவந்தார்க்கு மனதில் மூன்று எண்ணங்கள் உண்டு' என்பதன்றே முதலிற் காணப்படுகின்றது. அநுவாத முகத்தாற் கூறினரென்கின்றனரே. இதில் அநுவாத விலக்கணம் எங்கே? 'ஆளவந்தாருடைய பிரதமமான இழவைத்தீர்த்தருளினர்.' 'இரண்டாம் இழவையுந் தீர்த்தருளினர்.' 'திருதீயமான இழவையுந்தீர்த்தருளினர்' என்று இவ்வாறு முதனூல்களெல்லாம் ஒரு நிகராக விளங்கக்கூறுதலை உணர்ந்து அடங்குவாராக.]

6. (ஞானபோதினி: பக்கம்76-இல்), 'லீலாவிபூதி [இப்பூலோகம்]—இது மரபுவழு' என்றார். அந்நூலாசிரியர், 'இப்பூவுலகமே' என்னாது, திருமால் லீலை கொண்டாடிய காரணத்தாற் பெரியார் கூறும் மரபிற்கிணங்கி அங்ஙனங் கூறியதை வைணவரல்லார் அறியார்.

[இவ்வொருவர் குற்றத்துக்கு அனைவரையும் உள்ளாக்குகிறார்! திருமால் லீலை கொண்டாடியது பூலோகத்தில் மாத்திரமேயோ? மற்றவுலகங்களிலில்லையோ? பூமியைப்பற்றிக் கூறுமிடத்து லீலா விபூதியாகிய இப்பூலோகம் என்றால் ஒருவாறு பொருந்தினும் பொருந்தும். லீலா விபூதிக்கு இலக்கணங் கூறவந்த விடத்து 'லீலா விபூதி இப்பூலோகம்' என்றால் என் தவறாகாது? லக்ஷண வாக்கியங்கள் அவ்யாப்தி முதலிய குற்றங்கட்குச் சிறிதும் இடமின்றி யிருத்தல்வேண்டுமென்பது அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததேயாம்.]

7. 'திருமலையாண்டான்', 'திருமாலையாண்டான்' என இரண்டு வகையாக் கூறுவதும் பழைய புத்தகங்களின் வழக்கென நண்பர் அறியவேண்டும். அன்றியும், அங்ஙனம் அறியக் கூடாவிடின் அச்சுப்பிழை என்றாயினுங் கொள்ளலாமன்றோ? அச்சுப்பிழைகள் நம் தமிழ்ப்புத்தகங்களிலிருத்தலியற்கையென்பதையும் நண்பர் தம் புத்தகத்தினின்றும் உதாரணங்கண்டுணர்வாராக.

[பழைய புத்தகங்களிலெல்லாம் 'திருமாலையாண்டான்' என்றேயுளது. 'திருமலையாண்டா' னென்று உண்டாகில் அவ்வகைப் புத்தகங்காட்டவேண்டும். வெற்றுரை பயனுறாது. ஒருவகை யச்சுப்பிழையே நூன் முழுவதும் வந்ததெனின், அஃதும் அகற்றற்பாற்றே. ஒரு புத்தகத்திற்

காட்டியபிழையை மறுத்தற்குப் புத்தகங்களையெல்லாம் பிழை யென்றல் சாலுமோ? 'அச்சுப்பிழைகள் நம் தமிழ்ப் புத்தகங்களிலிருத்தல் இயற்கை' என்று தனித் தன்மைப் பன்மையா லெழுதியதை யாம் மறுப்பானேன்? அச்சுப்பிழைகட்குந் தமிழ்ப்புத்தகங்கட்கும் இடைவிடாத்தொடர்பு கற்பித்தல் இவர் துணிபுபோலும். பிழையில்லாத் தமிழ்ப் புத்தகங்களுங் காணலாமன்றோ?]

8. ஷ பக்கத்தில், 'பாதநூளிகள் ......... வேண்டுவதன்றோ?' — என்ற இவ்வாக்கியத்தில் 'வேண்டுவது' என்பதைச் செயப்பாட்டு வினைப்பொருட்கண் வந்த செய்வினைத் தொழிற்பெயர் என்பதையும், 'அன்று' என்பதை ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுவான முற்று என்பதையும் நம் நண்பர் அறியவேண்டுவ தவசியமே.

[இவர் கூறுகிறபடி வேண்டப்படுதலென்று பொருள் கொண்டாலும் பொருந்துமாறெங்ஙனே? அன்று என்பதற்குக் கூறிய இலக்கணம் ஈண்டைக்கு ஏலாது.]

இனி, 'நீவாழ்வீராக' என்றவிடத்து அச்சுப் பிழையால் வந்த 'நீ' என்னுமொருமைப் பெயர் சில பிரதிகளில் மாத்திரம் காணப்படுமேயன்றிப் பலபிரதிகளில் 'நீர்' எனப்பன்மையாயிருத்தலையும் அன்னார் ஆராய்ந்து வழாநிலை எனக் கொள்வாராக.

['நீர்' என்று பதிப்பித்த புத்தகம் சிலகாட்டிப் பின்னரே இது கூறத்தக்கது. அங்ஙனங் காட்டாது கூறுதலில் யாதுபயன்?]

9. (ஞானபோதினி பக்கம் 76-இல்) 'கடித்த பாம்புவலிதாகில்...... சேவிக்கும்' என்ற இதற்கு எழுவாய், இதன்முன் வாக்கியமாகிய 'கடியுண்ட பாம்பு வலிதாகில்.........சேவிக்கும்' என்ற வாக்கியத்திலுள்ளதே எழுவாய் எனக்கொள்க. இவ்விரண்டு வாக்கியங்களையும் தொடர்நிலையாக அன்னார் அறிவாராக. இங்ஙனங் கூறல் பாஷை நடை என்க. இதனை, பிறபாஷைகளிலுங்காண்க. உதாரணம். ("Great honor to the fire-flies. But." என்ற Carlyle என்னும் ஆங்கில வித்வானது) வாக்கியத்தினுங் காண்க.

[இரண்டு வாக்கியங்கட்குந் தொடர்பின்மை விளக்குமாறு முந்தின வாக்கியத்தினிறுதியில் முற்றுப்புள்ளி கொடுத்திருத்தலை யுற்றுநோக்கியொழிவாராக. நலிந்து அங்ஙனங்கொண்டாலும் மயங்கவைத்தலென்னுங் குற்றங் கைவிடாதே. வழுப்பட்டநடையைப் பாஷைநடையென்றல் தகாதன்றோ? இவர்காட்டிய ஆங்கிலமேற்கோள் இதற்கு ஒத்ததன்றென்பது ஒப்புநோக்கி யுய்த்துணரற்குரியது. அல்லதூஉம் 'கடித்தபாம்பு வலிதாகில் விரஜையிலே தீர்த்தமாடி ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவித்துக்கொண் டிருக்கிறேன்; கடியுண்டபாம்பு வலிதாகில் திருக்கோனேரியில் தீர்த்தமாடித் தேவரீரை ஸேவித்துக்கொண் டிருக்கிறேன்' என்று இங்ஙனம் முதனூல்களில் எல்லாம் மிகத் தெளிவாகவிருத்தலைக்கண்டு தெளிக.]

10. (ஞானபோதினி: பக்கம் 77-இல்) 'செவ்வனே பழுத்திருந்த தேமாங்கனிக்குக் கிளித் திரள்கள் காத்திருக்குமாறுபோல அவ்வெம் பெருமானுருடைய திருமேனியைக் காத்திருப்பாராயினர்'—இதில், நம நண்பர் விபரீதப் பொருள் கொள்கின்றார். இதில் இங்கு, அனுபவ யோக்கியவஸ்து என்று மாத்திரங் கொள்ளவேண்டுமே யொழிய வேறுவகை கொள்ளலாமோ? இதனை நம் நண்பர், "உண்டிட்டாயினியுண் டொழியாய்" என்ற

பெரியார் செய்யுளிலும், 'அஹமன்னம்'' அன்னதோஹம்'' என்ற வேத வாக்கியங்களிலும் கண்டு தெளிவாராக. இவ்வாக்கியங்கட்கும் இங்ஙனமே விபரீதமாகக்கொண்டு கடவுள் சேதனர்களுடைய என்பு முதலியவற்றைப் பற்றித் தின்கின்முன் எனவும் சேதனரும் கடவுளுடைய என்பு முதலிய வற்றைப் பற்றித் தின்கின்முர் எனவுங் கூறுவர்போலும். நிற்க.

[இது மிகைபடக்கூறல். ' பழுத்திருக்கிறதேமாவைக் கிளித்திரள்கள் காத்திருக்குமாபோலத் தத்துல்யரான இவர்களும் விமலசரம விக்ரகத் தைக்''கையிற்கனி''இத்யாதிப்படியே மெய்யிற்பிறங்கியசீரைப்'பழுக்கச்சேவித்துக்கொண்டு' என்று முதனூல்களி லுள்ளதற்கேற்ப எழுதினாலே விபரீதப் பொருள்பயவாது. வேற்றுமையை வேறுபடுத்தியது மயக்கத்திற்கிடமே.]

தாய் மகனை, 'அவர்' எனச் சிறப்பித்துக் கூறல் 'இயல்வதன்று' என்ற நம் நண்பர், அறிவொழுக்கங்களா லுயர்ந்தார் வயதிற்சிறியாரெனி னும், தாய்முதலோராற் சிறப்பிக்கவுரியராவர் என்பதுபண்டைப்பெரியோர் கொள்கையென அறியவேண்டுமே! இனி, இம்மரபைத் '' திருநெடுந்தாண்ட கம் '' என்ற பிரபந்தத்தின் வியாக்கியானத்தால் தெளிவுபெற அறிவாராக.

[பெரியதொரு நூலுரையின் பெயர் மாத்திரத்தை யெழுதி மருட்டத் தொடங்கவேண்டா. மேற்கோள் வாக்கியத்தை யெடுத்துக்காட்டித் தமது கொள்கையைத் தாபித்துக்கொள்ளலே தர்க்கலக்ஷணம்.]

அன்பர்காள்! யாம் வீணே பயனற்ற இத்தகையசெயலிற் காலம்போக் கோமாதலின், அறிவுடைய இத்தமிழுலகம் உண்மையீதென வுணருமெனு முறுதிகொண்டு இரண்டொரு வார்த்தையால் இத்துடன் முடித்துவிடுகின் ருேம்.

**குறிப்பு** :—ஞானபோதினி: பக்கம்75-இல் ''நடுக்கடலில்......அவதார ஞ்செய்தது'' என்ற வாக்கியமும், 76 - இல் '' தந்தையின் பொருளை...... சமர்ப்பித்து'' என்றவாக்கியமும், 77-இல் '' கடித்தபாம்பு......சேவிக்கும்'' என்ற வாக்கியமும் பூர்வாசாரியர்களுடையன. இங்ஙனமாக, தாம் தமது சிற்றறிவிற் கேற்றபடி குற்றங்கூறுவது பாகவதாபசாரத்திற் காளாக்குவ துடன் போலியாராய்ச்சி என்பதும் தெற்றெனவிளங்கும்.

[பூர்வாசாரியர்கள் எழுதிய முதனூல்களில் இப்படியெல்லாம்வாக்கிய மில்லையென்பது அந்தந்த நூல்களைப் பார்த்தால்தானே புலப்படும். மேல்யாம் காட்டியுமிருக்கின்ருேம். ஆகவே இவரது கூற்றுப்பொய்யுமா யாய் இவர் வைணவநூல்களு மறியாரென்பதனை வலியுறுத்துகின்றது. முதனூல்கட்கு முரணாகக்கூறுவது சிற்றறிவும் பாகவதாபசாரமு மாமே யன்றி யதனையெடுத்துக்காட்டியது அங்ஙனமாகாதென்க. தமது போலி யாராய்ச்சியைப் பிறரிடத்துக் கண்ணாடியிற்போலக் காண்கின்ருர்; இத்தெளி விருந்தபடியென்னே !]

கிறிஸ்டியன்காலெஜ் ஆங்கில மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையில், 'நூலா ராய்வோர் குற்றத்தைக் கூருமல் குணத்தையேகூறி நூலியற்றுவோர் க்கு ஊக்கத்தினை விளைவிக்கவேண்டும்' என்னும் கருத்தடங்கிய வாக்கிய மொன்றெழுதிய நம் நண்பர் இங்ஙனம் குற்றம்கூறலும் தகுதியோ? இதுவும் நடுவுநிலைமையேயோ? ஆதலின், நமது நண்பர் இனி, இத்தகைய அற்பமும் குறைவுமான காரியங்களில் முயலாமல் நற்காரியங்களில் தமது வாணாளைச்செலவிட்டுப் பத்திரிகையையும் பயன்படுத்துமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

[கிறித்தவக்கலாசாலை ஆங்கில மாதாந்தப் பத்திரிகையில் யாம் எழுதியவற்றின் கருத்து இஃதன்று. அதில் 'இதனால் நூல்களிற் குற்றங்கள் மிகுந்துகிடந்தால் அவற்றை யெடுத்துக்காட்டாது பொதிந்து மூடி வைக்கவேண்டுமென்று யாம் கூறவரவில்லை. நூல்களிற் குற்றங்காணின் அவற்றை நூலாசிரியர்மனம் புண்ணாகாமல் இன்சொற்களா லெடுத்துக் காட்டிக் கூடுமானால் அவற்றைப் போக்குமாறு இவையென்று சுட்டலும் குணங்காணின் அவற்றையெடுத்து வியந்து மதித்துப்பேசலும் வேண்டும்' என்று யாம் எழுதியதனால் எமது கருத்து நன்குவெளியாம். அங்ஙனமே யிந்நூலின் குணங்களைப்பற்றி முதலில் மிகவும் வியந்துகூறிப் பின்பு குற்றங்களை இன்சொற்களா லெடுத்துக்காட்டி அவற்றைப் போக்குமாறிவையென்று சுட்டியு முள்ளோமாதலால் தகுதியினின்றும் நடுவுநிலைமையினின்றும் தவறினோ மல்லேம். யாம்செய்ததொழில் அற்பமும் குறைவுமாகாது; நற்காரியமேயாம். இது பத்திரிகையையும் மிகப்பயன்படுத்துவதே.]

'**விர்தம்**' 'நாகரிகம்' முதலிய வடமொழிகள் தமிழில் ஏற்றவாறு திரிந்து வழங்கும் என்பதையும் நண்பர் அறிவாராக.

[வடமொழிகள் மனம்போனபடியெல்லாந் திரியுமென்பது அறிதற்பாற்றன்று. உண்டாயிற் குறித்தவற்றிற்கு மேற்கோள் காட்டுக. இனியிது நிற்க. சில குற்றங்காட்டியதற்கே இன்னணம் அவத்தைப்பட்டுப் புழுங்கியழுலுறும் இவர் யாம் அவர் நூலிலுள்ள குற்றமனைத்தையுங் காட்டிவிட்டால் என்படார்? அயயம் நேர்ந்துழி ஏனையவற்றையும் எடுத்துக்காட்டத் தடையில்லை யென்க. மற்று, மேற்குறித்த ஆராய்ச்சி விடையினை யெழுதியவரது ஆவலின்படி அதனையிங்குப் பதிப்பித்தோமாயினும் இனி இத்தகைய சாரமீற்ற வீண்வாதத்திற்குப் பத்திரிகையில் இடங்கொடோம்.]

---

# REVIEWS OF BOOKS.

## புத்தகக்குறிப்புக்கள்.

### ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்.—பாலகாண்டம.

[இது சென்னை எஸ்பிளனேடிலுள்ள புத்தக வியாபாரிகளுள் தலைநின்றவராகிய வெ. கல்யாணராம ஐயரவர்கள் பதிப்பித்தது. விலை ரூ. 1—12—0; தபாற்கூலி வேறு.]

வடமொழியிலே ஆதிகாவியமெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதும் விசேஷ கௌரவம் வாய்ந்ததும் பல்லோர்களானும் பூஜாகாலங்களிற் பாராயணஞ் செய்யப்படுவதும் பல அருமையான இரகசியங்களையும் நல்லொழுக்கங்களையுங் கற்பிக்க வல்லதும் ஆகிய நூல் ஸ்ரீமத் வால்மீகி மகர்ஷியாற் செய்யப்பட்டுள இராமாயணமேயாம். இவ்விராமாயணத்தையும் வாமன போதாயனங்களாகிய இராமாயணங்களையும் கற்று வழிநூலிலக்கணத்திற்கேற்பப் புதியனவாகச் சிலவற்றை யமைத்துச் செய்துள கம்பரது இராமாயணமும் அதற்கியைந்தபடி செய்யப்பட்ட கம்பராமாயண வசனமும் இருப்ப, வால்மீகி ராமாயண வசனமொன்று ஏற்பட வேண்டுவதன் ஆவசியகத்தைப்பற்றி யந்நூலின் முகவுரையே தெளிவுபெறக் கூறுகின்றது. ஆதலின் இந்நூலின் இன்றியமையாமையைப்பற்றி யாமொன்றும் எடுத்துக் கூறவேண்டுவது அத்துணையவசியமில்லை. மற்று, இத்தமிழ்நூலை வடமொழியினின்றும் மொழிபெயர்த் தியற்றியவர் **பிரமஸ்ரீ பண்டிதர் ச. ம.**

நடேச சாஸ்திரியாரவர்கள், பி. ஏ. இது கும்பகோணக் கலாசாலைத் தமிழ் வித்துவான் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்களாலும், ஸ்ரீ வை. மு. சடகோப ராமாநுஜாசாரிய ரவர்களாலும் பார்வையிடப் பட்டது; மிக்க இனிமையுந் தெளிவும் வாய்ந்த தமிழ் நடையிலமைக்கப்பட்டுளது. எவ்விடத்திலேனும் படிக்கும்போது அதிகமாகத் தடைப்படுதலின்றி ஒழுகிய லோசை யுடைத்தாய்ச் செவ்வனே செல்லுகின்றது. எப்பொழுதும் மொழி பெயர்ப்புக்களெல்லாம் விசேஷமாய்த் திருத்திகரமாயிருத்த லில்லை யென்று பலரும் மொழிபெயர்ப்பு முறையைப்பற்றிக் குறைகூறக் கேட்டிருக்கின்றோம். அவ்வாறு கூறப்படும் தோஷத்திற்கு இந்நூல் ஒரு விலக்காம் என்பது அதனைப் படிப்பார் யாவர்க்குந் தெற்றெனப்புலனும். அன்றியும் மொழிபெயர்ப்பு முறையிற் சிலர்க்குச் சில முடிபுடைய வாக்கியங்களே விசேஷ பிரீதியாம். வேறு சிலர்க்கு வேற்று முடிபுடைய வாக்கியங்களே விருப்பமாம். அவ்வாறொன்றுமின்றி யிந்நூல் யாவரும் விரும்பத் தக்கவாறு நன்கு அமைந்திருக்கின்ற தன்மை அனைவருங்கண்டு களிகூரத் தக்கதே. மிகவு முயர்வான காகிதத்திற் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டுளது. ஆடவரும் பெண்டிரும் ஒருங்கே விருப்பங் குன்றாதவாறு படிக்கத் தக்கது. இதனை நம்மவர் யாவரும் வாங்கிப்படிப்பார்களென்று நம்புகின்றோம்.

## "இந்தியா" ஸ்திரீயின் அழுகை.

[இது நாகர் கோயிலிலுள்ள நாஞ்சிநேசன் அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது; விலை அணு 3; தபாற்கூலி வேறு.]

இந்நூல் திருவாங்கூரைச் சேர்ந்த கோட்டாற்றிலுள்ள **மீனுட்சி நாயுடு** அவர்களால் எழுதப்பட்டது. தெள்ளிய நடையில் வாசிப்பவர் மனமுருகும்படி இஃது எழுதப்பட்டிருக்குந் தன்மை யாவரும் அறியத்தக்கது. பாலிய விதவைகளின் விவாகம் நமது சாஸ்திரங்களிலுள்ள மேற்கோள்கள் பலவற்றை யெடுத்து ஆதாரமாகக் காட்டி வலியுறுத்தப்பட்டுளது. இந்தியாவிலுள்ள இளங்கைம்மைகள் படுந்துயரம், கறந்தபால் கறந்தவண்ணம், தெரிவிக்கப்பட்டுளது. இந்தியாவின் அபிவிருத்தியைக் கருதி யுழைக்குந் தேசாபிமானிகள் யாவரும் இவ்விந்திய மாதின் அழுகையைக்கேட்டு இனிமேல் அவள் அழாதிருக்கும் வண்ணம் தக்கவாற்றான் முயற்சி யெடுத்துக் கொள்வார்களென்பது திண்ணம்.

## மதுரைச் சோக்கேசர் தாலாட்டு.

[இது சென்னைப் பண்டிதமித்திர யந்திரசாலையிற் பதிப்பித்தது இதன் விலை அணு-4; தபாற்கூலி வேறு.]

இந்நூல் பெரிய குளத்திலுள்ள தமிழ்ப்புலவராகிய **கருவை - சங்கரலிங்கம் பிள்ளையவர்கள்** இயற்றியது; பல அருமையான நூல்களின் விஷயங்களையெல்லாம் மேற்கொண்டு எழுதியது; மதுரைச் சொக்கலிங்கப் பெருமானது திருவிளையாடற் புராண முதலியவற்றின் சாரமாயுள்ளது; ஏறக்குறைய எண்ணூற்றுக்கு மேற்பட்ட கண்ணிகளுள்ளது; இனிமையுஞ் செவ்வியும் வாய்ந்த தெளிவான நடையில் அமைந்துளது; பாமரரும் பண்டிதரும் ஒக்கப்பாராட்டத் தகுவது; பத்திச்சுவை மிக்கொழுகுவது; மகளிரும் மகிழ்சிறந்து படிக்கற்பாலது; தமிழராவார் யாவரும் வாங்கி வாசிக்கத் தக்கது.

# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**நூலறிவின் இன்றியமையாமை:**—நூலெல்லாம் முற்காட்சியே. முற்காட்சி யெல்லாம் நன்மையைக் கைக்கொண்டு தீமையை விலக்குதற்கண் இறுதியில் ஓரளவி லுதவுகின்றன. நாம் செல்லும் வழியிற் கிடக்கும் ஒரு பொருளின் காட்சி அதன்மீது இடறிவீழாது நம்மைத்தடுத்தல் நிச்சயமாதல் போல, நூலுறுப்புக்களாய பிணிப்புண்ட நுட்பக் காட்சிகளும் தூரிய பொருள்களை நாம் நாடிச்செல்வுழிப் போதரும் இடையூறுகளான் எற்றுண்டு வீழாது நம்மைத்தடுத்தலும் நிச்சயமே. இவ்வாறு பிறப்பினும் செயலினும் ஒன்றுதல் பற்றி மிகவும் எளியனவும் மிகவும் நுண்ணியனவுமாகிய உணர்ச்சிகளை யெல்லாம் நாம் ஒரேவிதமாக நடாத்துதல்வேண்டும். நமதாற்றல்கள் செல்லுமட்டும், விரிந்த அறிவினை யடைதற் கேனும் அன்றி யாவருமே அடைந்துள அக்குறுகிய அறிவினையும் முன்னதனோடு ஒருங்கே யொழித்து விடுதற்கேனும் ஒற்றுமைநயத்தாற் கட்டுண்டுளேம்.

**நாகரிக இந்தியர் கடமை:**—மக்களுடைய ஜீவான்மாவினது தெய்வத்தன்மையைப்பற்றிய வுணர்ச்சியும், விலக்கின்றி ஒவ்வொரு மனிதனுடைய உயிரின் கண்ணும் கௌரவம் பாராட்டலுமே மெய்ச்சமயக் கோள்களாம். இவ்ற்றைச் சாமானிய ஜனங்களுணராதவாறு மறைத்துக்கொண்டு நிற்கும் பழைய மூடபக்தியாவன அனைத்தையும் அறவே களைந்தெறிய முயலவேண்டும். கூடியமட்டில் இம்மெய்ச்சமயக் கோள்களை யாண்டும் பரவச்செய்தல் வேண்டும். இக்கொள்கைகள் தொன்றுதொட்டுள்ள நமது இந்துமதத்தில் உள்ளனவேயாம். ஆயினும் அவை மறைந்துகிடக்கின்றன. அவைகளை மாசு கழீஇப் பொலிவுபெறச் செய்தல்வேண்டும். அங்ஙனம் செய்தால் மட்டில் இந்துமதத்துக்கு இப்போதுள்ள குறைகள் நீங்கும். இந்துக்கள் பேரவாவுடன் விரும்பும் நன்மைகளும் அன்னார்க்கெளிதினில் வந்தெய்தும். ஆகவே நாகரிகமடைந்த இந்தியர்களாகிய நம்மவர் யாவரும் மேற்கூறியவற்றைத் தம்முடைய கடமைகளெனக் கருதி அவற்றிற்குத் தக ஒழுகுவாராக. இக்கருத்தினை நமது சென்னைமா நகரத்தினின்றும் வெளிப்படும் **ஆரியன்** என்ற மாதாந்த ஆங்கிலப்பத்திரிகையின்கண் உருஷியப்பிரபுக்களு ளொருவராகிய **தாலுஸ்தாயீ** என்னும் பேரறிவாளரும் வலியுறுத் துரைக்குமாறு காண்க.

**நூற்பதிவுகாரர்:**—சென்ற ஆகஸ்டு௴ 21உ வெளியான போர்ட் ஸென்ட் ஜார்ஜ் கெஜட்டில், நமது சென்னையிராஜதானியில் அச்சிட்டு வெளிப்படும் நூல்களின் தொகுதி, மூன்று மாதங்கட் கொருமுறை வெளிப்படும் வழக்கம்போல, இப்பொழுதும் வெளிப்பட்டுளது. அதன்கண் யாவருங் கவனிக்கவேண்டியதோர் விசேடமுளது. இதுகாறும் நூற்பதிவுகாரர் அவ்வந்நூல்களைப் பற்றிய தமது குறிப்புக்களை வெளியிடுவது வழக்கம்; அவ்வாறு வெளியிடுவதற்கென்றே கெஜட்டில் இடம் விட்டிருப்பதுமுண்டு. இஃது இவ்வாறாகத் தற்காலம் வெளிப்பட்டுள மூன்றுமாத நூற்குறிப்புக்களுள் நூற்பதிவுகாரரது அபிப்பிராயங்களுள் ஒன்றேனுங் காணப்படவில்லை. அன்னார் குறிப்புக்களெழுதுவதற்கென விடப்பட்டிருக்கும் இடத்தையுங் காணேம். இது யாவருங்கண்டு களிகூரத் தக்கதன்றோ? இது விடயத்தில் நம் சென்னைத் துரைத்தனத்தாருக்கு நம்மவர் கடமைப்பட்டவராகின்றனர்.

**மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு வேண்டியன சில:**—முதற்கண், சங்கத்திற்கென 5000 - ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ள நிலத்தின்கண் யாவரும் விரும்பத்தக்க விதமாகச் செவ்வி வாய்ந்ததோர் கட்டிடம் கடிதில் அமைத்தெழுப்புதல் இன்றியமையாதது. சென்ற மதிகூடிய சங்கக்கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியவர்கள் வெகு சீக்கிரத்தில் ஒழுங்கான பல ஏற்பாடுகளைச் செய்திருந்தமையைக் கவனிக்குமிடத்து அடுத்த வருஷம் சங்கப்புலவரெலாம் வந்து ஒருங்கே கூட்டங்கூடுமுன் கட்டிடம் அமைக்கப்படுமென்று நம்புகின்றனம். வருடந்தோறும் நிகழக்கடவ நமது சங்கக்கூட்டம் மிகப் பெரிதாயிருக்குமாதலின் அதற்கெனப் போதரும் யாவரும் இனிதினிருக்கத்தக்கவாறு சபாமண்டபத்தைத்தக்க வளவு அகன்றதாயும் வளிநன்கு ஊடறுத்துச் செல்லத்தக்கதாயும் மிக்க ஒளியுள்ளதாயும் வெகு தூரத்திலிருப்பவர்களும் பிரசங்கிப்போரது வாய்மொழிகளைச் சிறிதேனுந் தவறவிடாது செவிக்கொள்ளுதற்கண் உதவத்தக்கதாயும் அமைத்தலு் வேண்டும். மதுரை மாநகர் செய்த தவத்தாற்றோன்றிச் 'செந்தமிழ்ப் பாற்கடல் புந்திமத் தாற்கடைந், தட்பொ ருளாகிய தப்பகல் லமுதை, யுரையெனத் தந்த நரைமூதாள'ராகிய உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியருக்கு நமது அன்பின் அறிகுறியாக வெண்கற்சிலை யொன்று அமைத்து நமது சங்கத்துச் சபாமண்டபத்தலைக்கண் நிறுவுதல் வேண்டும். இதனைக் கவனித்துச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியவர்களும் வித்துவான்களும் ஏனைய அவயவிகளும் அனுமோதிப்பார்களென்று நம்புகின்றோம்.

**ஜனப்பிரியன்:**—இப்பெயர் கொண்டதோர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை சென்ற ஒரு வருடகாலமாக நடந்து வந்து இப்பொழுது இரண்டாம் பிராயத்தினையுற்று முன்னையினும் மிக்கவலியடைந்து, **ம-ா-ா-ஸ்ரீ, சருக்கை-இராமசுவாமி ஐயங்காரவர்கள், பி. ஏ.,** பத்திராதிபராக நடாத்துகின்றமையின் மிகவும் மேம்பாடெய்தி விளங்குகின்றது.

**விவேகபாநு:**— இத்தலைப்பெயர் பூண்டதோர் தமிழ்ப்பத்திரிகை ஆதரிப்பாரின்றி நின்றுவிட்டதெனக் கேள்வியுற்றுப் பெரிதும் மனமுளைகின்றோம். அது தொடங்கிய கம்பீரத்தையும், மேற்கொண்டுலாவிய விஷயங்களினுயர்வையும், விஷயங்களெழுதப்பெற்ற தமிழ்நடையையும்பற்றி உற்றுநோக்கினார்யாவரும் இவ்வாறு அம்மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை நின்றுவிட்டமையைப்பற்றி யிரங்குவாரென்பது தேற்றம்.

**திருப்பாதிரிப் புலியூர்ப் பெண்பாடசாலை:**—இப்பாடசாலையை யொட்டி இரட்டணை **அசலாம்பிகை யம்மையவர்கள்** வாரந்தோறும்ஞாயிற்றுக் கிழமைமாலை 3 மணிமுதல் 5 மணிகாறும் ஆண்டுள்ள பெரிய மனிதர்களுடைய மனைவிமக்கள் முதலாயினாரைக் கூட்டிவைத்துக்கொண்டு அவர்கட்கு நம் தமிழ்ச் செய்யுட்களின் சுவையையும் அருமை பெருமைகளையும் எடுத்துக் காட்ட விரும்பிக் கம்பராமாயணப் பிரசங்கம் நடத்திக்கொண்டு வருகின்றார்கள். தமிழ்க் கலை நலம் வாய்ந்த மகளிர்கள் கிடைத்தலருமையென்றுணர்ந்து, அத்தகையாரது உதவிகிடைத்தபோதே யாவரும் பயன் பெறவேண்டுமாதலின் அந்நகருள்ளார் அனைவரும் அவ்வம்மையவர்கள் முயற்சி கைகூடும் வண்ணம் செய்வார்களென்றெண்ணுகின்றோம். நம் அசலாம்பிகையம்மை யவர்களைப் போன்ற சில பண்டிதைகள் சென்னை, மதுரை, நெல்லை முதலிய இடங்களிலும் எழுந்து பெண்கல்வியை விருத்தி செய்வார்களாக.

# Specimens of RUBBER STAMPS

MANUFACTURED BY **THOMPSON & CO.,**

*The City Rubber Stamp Makers, Broadway, Madras.*



No. 313—Rs. 2-8-0.




No. 303—Rs. 2-8-0.




No. 314—Rs. 2-8-0.




No. 309—Rs. 2-0-0.




No. 300—Rs. 3-0-0.




No. 304—Rs. 3-8-0.




No. 302—Rs. 2-0-0.




No. 306—Rs. 3-0-0.




No. 308—Rs. 3-8-0.

ஒவ்வோர் டைரியிலும் நமது சக்கரவர்த்தியினுடைய உருவப் படம் மிக நேர்த்தியாய் அச்சிட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

தாம்ஸன் அண்டு கம்பெனியார்

# மினெர்வா டைரிகள்.

அடுத்துவரும் 1902வருஷத்துக்கு அதி உபயோகமான சிறந்த விஷயங்களடங்கிய டைரிகள் விற்பனைக்குத் தயாராக விருக்கின்றன.

நெ. 1 ஆறுவித பாஷைகளில் அச்சிடப்பட்ட மினெர்வா பாக்கெட் டைரி 3 அங்குல உசலமும் $4\frac{1}{4}$ அங்குலநீளமும் உள்ளது. 0 4 0

2. ஷை ஷை மடிப்பு உள்ளதும் பென்சல் வைக்கப்பட்டதுமான பாக்கெட் டைரி 0 6 0

3 அதிக உபயோகமுள்ளதும் அவசியமான விஷயங்களடங்கியதும் 8 - அங்குல நீளமும் 5 - அங்குல அகலமும் உள்ளது. 0 12 0

3. ஷை பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது 1 0 0

4. அதிக உபயோகமும் அவசியமுள்ளதுமான விஷயங்களுடையதும் 10 - அங்குல நீளமும் 8 - அங்குல அகலமுமுள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. 1 2 0

5: பூல்ஸ்காப் கடித அளவில் அச்சிடப்பட்டு நேர்த்தியாய்ப் பயிண்டு செய்யப்பட்டதும் அதிக உபயோகமும் அவசியமுமான விஷயங்கள் அடங்கியதும் 13-அங்குல நீளமும் 8-அங்குல அகலமும் உள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. 1 4 0

மேற்கண்ட டைரிகளில் 1-வது 2-வது நெம்பர் டைரிகள் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, துலுக்கு, மலையாளம், கன்னடம் இந்த ஆறுவித பாஷைகளில் தேதிகள் அச்சிட்டிருப்பதோடும் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் பஞ்சாங்கம், 12-மாதத்து ராசி சக்கரம், அமிர்தயோகம் யோகினிநிலை, மகர சங்கராந்தி, ஆலயதரிசனம், ஆபரணம் அணிதல், ஆருடத்திற்கு, ஆந்தைக்காதல், உபநயனத்திற்கு, உழவுசெய்ய, எதிர்கொள்ளுதலிவை நன்மை தீமை யறியும் பயன், கருட தரிசனம், இராகுகாலம், கரிநாள், சாதகுத்தும் நாள், கிருகப்பிரவேசம், சோடியுடுத்தல், சீமந்தம், க்ஷௌரம், திக்குத்தும்பல், தேகிமழை, கிவேஷக் முகூர்த்தம், பயணஞ்செய்யும் தினம், செய்யாத்தினம், பல்லிவிழும் பலன், கௌரி பஞ்சாங்கம், முதலியவைகளும் அச்சிடப்பட்டிருப்பதனால் இஃது எல்லோருக்கும் சிறந்த உபயோகத்தைக் கொடுக்கும். இதுவரை வெவ்வேறிடங்களில் அச்சிடப்பட்ட டைரிகளைக்காட்டிலும் நூதனமும், அதிக விசேஷமுமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

வேண்டுவோர் அடியிற்கண்டவிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

தாம்ஸன் கம்பெனி,
33, பிராட்வே, சென்னை.

PRINTED AT THE "MINERVA" PRESS, BROADWAY, MADRAS.